ஆகஸ்ட் - 2010

திருவள்ளுவர் ஆண்டு 2041

# செந்தமிழ்

தொகுதி : 54
பகுதி : 10

விலை ரூ. 10/-

திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம்
செந்தமிழ்க் கல்லூரி
மதுரை - 625 001
[ ஐந்து நட்சத்திரத் தகுதி பெற்றது ]
( மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைப்புப் பெற்றது)

# தமிழாசிரியர் பயிற்சிச் சான்றிதழ் வகுப்பு

(TAMIL PANDIT TRAINING CERTIFICATE COURSE)

(ஆண் - பெண் இருபாலருக்கும்)

தகுதி : புலவர் பட்டயம் / பி.லிட். பட்டம் / பி.ஏ. தமிழ் பட்டம் தேர்ச்சி

காலம் : 90 வேலை நாட்கள்
( முழுநேரப் படிப்பு )

மிகக் குறைந்த கட்டணம் !

நன்கொடை கிடையாது

2010 - 2011ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது

முனைவர் எஸ். விஜயன்
முதல்வர் (பொறுப்பு)

திரு. இரா. குருசாமி பி.ஏ.
செயலாளர்

# செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 54 திங்கள் இதழ்

பகுதி : 10 திருவள்ளுவர் ஆண்டு 2041

ஆகஸ்ட் 2010



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

**ஆசிரியர்**
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்

விகடகவி ! *ஆறுவிரல் ஐம்பொறி* 4

புறநானூற்றில் இயன்மொழித்துறைப் பாடல்கள் 6
*செல்வி இரா. மாரியம்மாள்*

செம்மொழிப் பாங்கில் சமயத் தமிழ் 14
*தமிழாகரர் தெ. முருகசாமி*

சேதுபதி செப்பேடுகள் 19
*தினமணி நாளிதழ் செய்தி*

பதிற்றுப் பத்தில் எண்ணியல் சிந்தனை 22
*முனைவர் இ. இராசா*

சீர்காழி மூவர் முனைவர் இரா. செல்வக்கணபதி 34

# இதழ் மணம்

அன்புடையீர்,

செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.

ஒரு காலத்துத் தமிழர்களின் சிந்தனையையும் அதன் சிறப்பையும் அறிய "ஆறுவிரல் ஐம்பொறி" அவர்களின் "விகடகவி" என்ற நகைச்சுவைச் சிதறல்களோடு 2010 ஆகஸ்ட் மாதச் செந்தமிழ் தொடங்குகிறது.

சங்க இலக்கியத்தில் புறப்பாடல்கள் படிக்கப் படிக்கப் புதிய புதிய பொருள்களைத் தந்து நமக்குப் புத்துணர்வைத் தருகின்றன என்பதைச் செல்வி இரா.மாரியம்மாள் அவர்களின் இயன்மொழித்துறைப் பாடற்கருத்துக்கள் விளக்குகின்றன.

தமிழில் பண்ணாராய்ச்சி வளர்ந்தமையும் பண்சுமந்த பாடலுக்கு இறைவனின் பரிசு கிடைத்தமையையும், செம்மொழிப் பாங்கில் சமயத்தமிழ் என்ற கட்டுரையில் நமது தமிழாகரர் தெ. முருகசாமி சிறப்பிக்கிறார்.

ஏழு என்ற எண்ணிற்கு இருக்கின்ற சிறப்புக்களோடு ஐந்து, இரண்டு போன்ற எண்களுக்கும் இருக்கும் சிறப்பினை விளக்கும் முனைவர் கி.இராசா அவர்களின் "எண்ணியல் சிந்தனை" பதிற்றுப்பத்தை மீண்டும் நம்மைப் படிக்கத் தூண்டுகிறது. சேதுபதி செப்பேடுகள் சேது நாட்டுச் செந்தமிழ் மறவர்களுக்குச் சிறப்புச் செய்வதை அறியலாம். செந்தமிழ் வாரிதி இரா.செல்வகணபதி பேச்சிலும், எழுத்திலும் வல்லவர். சைவத் தொண்டைப் பொறுத்த அளவில் வாழும் சேக்கிழாராகவே அவரைக் கருதலாம். சீர்காழி மூவர் என்ற கட்டுரையை இம்மாதச் செந்தமிழுக்கு உவந்தளித்திருக்கிறார். பருகி மகிழலாம். இம்மாதச் செந்தமிழ் செழுமையோடு தங்கள் கைகளில் தவழ்கிறது. செந்தமிழுக்குச் சிறப்புச் செய்ய "சேரவாரும் செகத்தீரே !"

இனி நீங்களும் இதழும்....

முனைவர் க. சின்னப்பா

# விகடகவி !

*ஆறுவிரல் ஐம்பொறி*
வீரசோழபுரம்

விகடகவி என்ற சொல்லை முதல் எழுத்திலிருந்து படிக்கும் போதும், இறுதி எழுத்திலிருந்து திருப்பிப் படிக்கும் போதும் விகடகவி என்றே அமைகிறது. விகடகவி போல ஒரு செய்யுளை ஈறு முதலாக வாசித்தாலும் அச்செய்யுளேயாவது மாலை மாற்று என்ற சித்திரகவி ஆகும். தண்டியலங்காரம் கூறும் இருபது வகை சித்திர கவிகளுள் மாலை மாற்று என்பது ஒரு வகையாகும்.

*இச்சித்திர கவியை வரையறை செய்ய மாறனலங்காரம் என்ற அணி* இலக்கண நூல் கூறும் ஒரு பாடலை இங்கு காண்போம்.

*ஒரு செய்யுண் முதலீறுரைக்கினு மஃதாய்
வருவதை மாலை மாற்றென மொழிப*

என்பதே அப்பாடல். ஒரு செய்யுள் முதலீறாகவும் ஈறு முதலாகவும் உரைக்க (வாசிக்க) அதே செய்யுளாய் வருவதை மாலை மாற்று என்று கூறுவர் என்பதே மாறனலங்காரம் கூறும் இப்பாடலின் பொருளாம்.

ஒரு மாலை இடப்பக்கக் கழுத்தில் தொடங்கி வலப்பக்கக் கழுத்தில் முடிகிறது என்று கொள்வோமானால் வலப்பக்கக் கழுத்தில் தொடங்கி இடப்பக்கக் கழுத்தில் முடிவதும் அதே மாலையேயாகும். அதுபோல ஒரு செய்யுளை முதலிலே தொடங்கிப் படிக்கும் போதும், இறுதியிலே தொடங்கித் திருப்பிப் படிக்கும் போதும், அதே செய்யுளாய் அமைவது மாலை மாற்று என்னும் சித்திர கவியாகும். மாலையை மாற்றிக் காண்பது போல செய்யுளை மாற்றிப் படிப்பதால் இச்சித்திரகவி மாலை மாற்று எனப்பட்டது.

இம்மாலை மாற்று சித்திர கவிக்குத் தண்டியலங்காரம் கூறும் ஓர் எடுத்துக்காட்டுக் குறள்வெண்பாவைக் கண்டு மகிழலாம்.

*நீவாத மாதவா தாமோக ராகமோ*
*தாவாத மாதவா நீ*

இப்பாடலை முதலில் தொடங்கி இயல்பாகப் படித்துவிட்டீர்கள். இப்பாடலை இப்போது இறுதியில் தொடங்கி திருப்பி படித்துப் பாருங்கள். முதலில் தொடங்கிப் படித்த அதே செய்யுளாகவே அமைவதைக் காண்பீர்கள் என்ன விந்தை ! என்னே தமிழ் !

இக்குறள் வெண்பாவின் பொருளைக் காணலாம், (நீவுதல் - நீங்குதல். நீவாத - நீங்காத. மா - பெரிய. தவா - தவத்தையுடையாய். தா - வலி - மிக்க. மோகம் - மயக்கம். ஆகம் - உடல். தாவுதல் - பாய்தல். தாவாத - பாயாத. மாதவா - மாது + அவா - மாதின் ஆசை) எனவே 'நீங்காத பெரிய தவத்தையுடையாய் ! மிக்க மயக்கம் கொண்டு மாதின் உடல் மீது உள்ள ஆசையை நீக்குவாயாக' என்பதே இப்பாடலின் பொருளாம்.

இச்சித்திர கவிக்கு மேலும் இரண்டு எடுத்துக்காட்டு குறள் வெண்பாவைத் தண்டியலங்காரம் கூறுகிறது. அவை,

1. *வாயாயா நீகாவா யாதாமா தாமாதா*
   *யாவாகா நீயாயா வா.*

2. *பூவாளை நாறுநீ பூமேக லோகமே*
   *பூநீறு நாளைவா பூ.*

என்பனவாகும். இப்பாடல்களையும் இறுதியிலிருந்து முதல் வரை படித்து மகிழுங்கள். அக்காலத்தில் தமிழரின் சிந்தனைச் சிறப்பை அறியும் போது வியக்காமல் இருக்க முடியவில்லை. !

# புறநானூற்றில் இயன்மொழித்துறைப் பாடல்கள்

செல்வி இரா. மாரியம்மாள்
சிவகாசி

இலக்கியம் என்பது ஒரு கண்ணாடி. பொதுவாக கண்ணாடி தன் முன்னே இருக்கும் ஒரு பொருளின் பிம்பத்தினை உள்ளது உள்ளவாறு காட்டுவதாகும். ஆனால் இலக்கியக் கண்ணாடி தன் முன்னே நிற்கும் பொருளின் பிம்பத்திடையே ஊடுருவிச் சென்று அவ்விலக்கியம் தோன்றிய காலச் சூழலையும் புலப்படுத்துகிறது. காலச்சூழலினால் சமூக மாற்றங்கள் ஏற்படுகின்றன. சமூக மாற்றத்தினால் ஏற்படக்கூடிய தனி மனிதனின் உளவியல் சார்ந்த தன்மைகளை விளக்குவதற்கு இலக்கியங்கள் துணை செய்கின்றன. அவ்வாறு சமுதாயச் சூழலினால் ஏற்படக்கூடிய உளவியல் தன்மைகளைச் சமுதாய உளவியல் என்பர்.

அந்த வகையில் புறநானூற்றுப் பாடல்கள் தோன்றிய சமுதாயச் சூழலில், உளவியல் தன்மைகளை இயன்மொழித் துறைப்பாடல்கள் மூலம் விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது. பாடாண்திணைத் துறைகளுள் ஒன்று இயன்மொழியாகும். புறநானூற்றில் இத்துறையில் அமைந்த 24 புலவர்களால் பாடப்பட்ட 55 பாடல்களை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

### சமுதாய உளவியல் (Social Psychology)

சமுதாயம் என்பது ஒருவர் மற்றொருவரைச் சார்ந்து வாழக்கூடிய அமைப்பாகும். குழந்தைகள் பெற்றோரையும் பெற்றோர் சமூகத்தையும் சார்ந்து வாழ்கின்றனர். அவ்வாறு சார்ந்து வாழும் பண்பு மனிதப் பண்பு ஆகும். "சமுதாயம் என்னும் சொல்லிற்கு மக்களின் திரள் என்னும் பொருளினைத் தமிழ்ப் பேரகராதி (ப. 682) விளக்கம் தருகின்றது" "ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்டகாலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கட்கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பே சமுதாயமாகும்."

பிறப்பு முதல் இறப்பு வரையில் உள்ள ஒருவனின் நடத்தையைச் சமூகம் பாதிக்கிறது. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒரு மனிதன் ஒருவகைச் சமூகச் சூழலில் வாழ்கின்றான். சமூகத்தில்

மனிதர்கள் ஏற்படுத்தும் செயல்கள் வெளிப்படையாகவும் மனம் சார்ந்தும் அமையும். இதிலிருந்து "சமுதாய உளவியல் என்பது தனிமனித நடத்தையின் தன்மையையும் அதன் காரணங்களையும் சமூகச் சூழலில் புரிந்து கொள்வதாகும்" என்ற ச. சரஸ்வதி (சமூக உளவியல், ப. 22) கருத்தின் மூலம் அறியலாம்.

## புறநானூற்றுச் சமுதாயம்

புறச்செய்திகளின் வாயிலாக வெளிப்படும் புறநானூற்றுச் சமுதாயத்தை இனக்குழுச் சமுதாயம், நிலவுடைமைச் சமுதாயம் என இரண்டாக வகைப்படுத்தலாம். இதனை வன்புலச் சமுதாயம், மென்புலச் சமுதாயம் என்றும் கூறுவர். வன்புலச் சமுதாயம் காடுசார்ந்த விளைச்சலையும் மென்புலச் சமுதாயம் மருதநிலம் சார்ந்த விளைச்சலையும் அடிப்படையாகக் கொண்டவை. இனக்குழுவின் வீழ்ச்சி, நிலவுடைமைச் சமுதாயத்தின் வளர்ச்சி என்ற இரு விளிம்புகளையும் புறநானூறு புலப்படுத்துகிறது.

## இனக்குழுச் சமுதாயம்

மனிதன் ஒரு சமூக விலங்கு. அவன் தன்னுடைய உணவிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் வேட்டைத் தொழிலுக்காகவும், பிறிதொரு மனிதனையோ அல்லது குழுவினரையோ சார்ந்து கூட்டாக வாழ்ந்தான். அவ்வாறு ஒரு தேவையின் பொருட்டு குழுவாக வாழக்கூடிய மக்களை இனக்குழு என்பர். ஆதிச் சமுதாய அமைப்பாக உலகெங்கும் இனக்குழுக்கள் நிலவின. தமிழகத்தின் இனக்குழுக்கள் திணைகளின் அடிப்படையில் பாகுபடுத்தப்பட்டிருந்தன. சங்க காலத்திலும் சங்க முற்காலத்திலும் இனக்குழு வாழ்க்கை தமிழகத்தில் நிலவியது.

இனக்குழு மக்கள் பயன்படுத்திய கருவிகளைக் கொண்டும், வாழ்நிலையை அடிப்படையாகக் கொண்டும் இனக்குழு காலத்தை உலோக முற்காலம், உலோகக் காலம் என இரண்டாக வகைப்படுத்தினர். உலோக முற்காலத்தில் மனிதன் தன் கைக்குக் கிடைத்த கற்களைக் கொண்டு கருவிகளை உருவாக்கி வேட்டையாடினான். உலோகக் காலத்தில் காடுகளை எரித்து ஏரால் உழுது பயிர் செய்தான். மரத்தாலான கருவிகளையும், பின்னர் இரும்பினையும் பயன்படுத்தினான். இவ்வகையில் இனக்குழு மக்கள் வாழ்க்கையில் உலோக முற்காலத்தில் உணவு சேகரித்தல் வேட்டையாடுதல் ஆகிய தொழில்களும், உலோகக் காலத்தில் புராதன விவசாயம், கால்நடை வளர்ப்பு ஆகிய தொழில்களும் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

## கூட்டுழைப்பும் பகிர்வும்

குழு வாழ்க்கையில் வேட்டைத் தொழில் மிகவும் சிறப்புற்றது. பெரிய கூட்டமாகச் சென்று வேட்டையாடி தங்களுக்குக் கிடைத்தவற்றைத் தனித்து உண்ணாமல் அனைவர்க்கும் பகிர்ந்தளித்தனர். இனக்குழுச் சமுதாயத்தில் பகிர்வு என்பது கடமையாகக் கருதப்பட்டது. அது அனைவராலும் பின்பற்றக்கூடியதாக இருந்தது. "இனக்குழுச் சமுதாயப் பண்புகளில் தலையாயது பொதுவில் வைத்து உண்ணுதல். சங்கப்பாடல்கள் இதைக் கூட்டு உண்ணுதல் எனக் குறிப்பிடுகின்றன" என்ற மாதையன் (சங்ககால இனக்குழு சமுதாயமும், அரசு உருவாக்கமும் ப. 42) கருத்தின் வழி அறியலாம்.

இயன்மொழித் துறைப்பாடல்களில் இடம்பெறும் பாணர்கள் தாங்கள் பெற்ற பரிசிலினை சுற்றத்தார்க்கு கொடுத்து இன்புற்றனர். புறாவின் முட்டை போன்ற வரகரிசியை பாலோடும் தேனோடும் கலந்து முயலின் இறைச்சியையும் பாணர் சுற்றத்தாரோடு உண்டனர். (புறம். 378) மேலும் குறவர்கள் மிளகுக் கொடி வளரும் மலைச்சாரலிடத்துக் கிழங்கினையும், நல்ல நாள் பார்த்து உழாது தானே முளைத்த திணையினையும் பெற்றனர். (புறம். 168)

இவ்வாறு இனக்குழுச் சமுதாய மக்கள் வேட்டையாடுதலையும் மலைகளிலும், காடுகளிலும் இயல்பாகக் கிடைக்கக்கூடிய விளைபொருள்களையும் சார்ந்திருந்தனர்.

இனக்குழுச் சமுதாயத்தில் கள் முக்கிய இடம் பெற்றது. உழவுத் தொழிலின் போதும், விருந்தினரை உபசரிக்கும் போதும் கள் அருந்தினர். பாம்பின் விஷம் போன்று நாட்பட்ட கள்ளைத் தனக்கு புரவலன் வழங்கினான் என்று பாணர்கள் கூறுகின்ற செய்தி, இயன்மொழித் துறையின் பல பாடல்களில் காணப்படுகின்றன. (புறம் 9, 15, 102, 150, 376, 400).

## இனக்குழுத் தலைவன்

இனக்குழுத் தலைவன் இனக்குழு மக்களைப் போல சாதாரண நிலையிலேயே வாழ்ந்தான். அவனுக்கெனத் தனிச்சலுகைகள் வழங்கப்படவில்லை. மக்களோடு சேர்ந்து உழைப்பில் பங்கு கொண்டு உணவு தேடியும், உணவினைப் பகிர்ந்து கொண்டும் வாழ்ந்தான்.

புறநானூற்றில் பரணர் பாடலில் இனக்குழுத் தலைவனாகிய நள்ளியைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இனக்குழுத் தலைவனாகிய

நள்ளி காட்டில் கலைஞர் உணவின்றி வருந்தியதைக் கண்டு தான் வேட்டையாடிய உணவைத் தானே சமைத்துக் கலைஞர்க்கு வழங்கினான் என்று புலவர் கூறுகின்றார். (புறம். 150)

## மன்றம்

சங்க இலக்கியங்களில் கூட்டு வாழ்க்கையின் மையமாக மன்றம் விவரிக்கப்படுகிறது. இனக்குழு வாழ்க்கையில் மன்றம் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனை, "இனக்குழுவின் சபையாக நாள்மகிழிருக்கை இருக்கக்கூடும். இதனை நாள் மகிழிருக்கை, நாள் அவை, நாளவை எனவும் அழைக்கின்றனர்" என்ற கா.சுப்ரமண்யத்தின் கருத்தின் (சங்க காலச் சமுதாயம் ப. 6) வழி அறியலாம்.

இதிலிருந்து இனக்குழுச் சமுதாய மக்கள் கூடுகின்ற இடமாக நாள் மகிழிருக்கையைக் கருதலாம். புறநானூற்றின் இயன்மொழித் துறையில் கள் உண்டு மகிழும் நாள் மகிழிருக்கை அன்றி பிற இடங்களிலும் எப்போது வேண்டினாலும் கள் தரக்கூடிய இயல்பையுடையவன் தலைவன் என்று பாணன் குறிப்பிடுகிறான். இதனை,

*"நாட்களுண்டு நாண் மகிழ் மகிழின்*
*யார்க்கும் எளிதே தேரிதல்லே"* (புறம் 102)

என்ற பாடலடியின் மூலம் நாள் மகிழிருக்கை என்பது இனக்குழு மக்கள் கள்ளுண்டு மகிழ்ந்திருந்த இடமாகக் கருதலாம். மேலும் நாள் மகிழிருக்கையில் தன்னை நாடி வருபவர்களுக்குப் பரிசளித்ததையும் அறியலாம்.

## வன்புலம் மென்புலமாதல்

வன்புலச் சமுதாயம் தொழில் முறையில் முன்னேற்றமடைந்து மென்புலச் சமுதாயமாக உருப்பெற்றது. மருதநிலங்களை மையமாகக் கொண்ட மூவேந்தர்கள் இனக்குழு மக்களை வெற்றி கொண்டு தங்களுடைய ஆளுகைக்கீழ் கொண்டு வருதல் என்ற இரண்டின் காரணமாக வன்புலச் சமுதாயம் மென்புலச் சமுதாயமாக உருப்பெற்றது. மென்புலச் சமுதாயம் வேளாண் விளைச்சலை மையமாகக் கொண்டு செயல்பட்டது.

## தொழில் முன்னேற்றம்

இனக்குழு மக்கள் தனிமனிதனின் உடைமையில்லாத விலங்குகளை வேட்டையாடியும், மலைகளிலும், காடுகளிலும் இயல்பாகக் கிடைத்த பொருளையும் சார்ந்திருந்தனர். ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்தில் விளைநிலங்களைச் சார்ந்து உழுது அதன் மூலம் கிடைக்கக்கூடிய பொருளைப் பெற்று வாழ்ந்தனர். அதிகமான விளைச்சல் நிலங்களைக் கொண்ட மனிதன் மேலோங்கினான். இது தனிமனித ஆளுமைக்கு வழிவகுத்தது. இவ்வாறு இனக்குழுமக்கள் வேட்டைத் தொழிலிலிருந்து வேளாண்மைக்குள் அடியெடுத்த போது இனக்குழு அழியத் தொடங்கியது.

## மூவேந்தர்களின் எழுச்சி

சங்ககாலச் சமூகத்தின் இயல்பு அல்லது நடைமுறை என்பது உடல் வலிமையினால் ஒருவனை ஒருவன் வெற்றி கொள்வதாகும். இதனை,

*''ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்*
*புதுவதன்று இவ்வுலகத்து இயற்கை''*

என்ற பாடலின் மூலம் அறியலாம். ஆண்களின் உடல்வலிமையின் வெளிப்பாடான வீரத்தைக் கொண்டு ஒரு சாரார் மற்றொரு சாராரைப் பொருது அழித்து வெற்றிபெறுவர். அந்த வகையில் இனக்குழு மக்களை மருதநிலங்களைச் சார்ந்த மூவேந்தர்கள் மறத்தினால் வெற்றிபெற்றார்கள். மதில் அழிப்பும், விளைவயல் அழிப்பும் இவர்களின் வெற்றிச் செயல்களாய் காணப்பட்டன.

பகைவரின் மதில்களை அழித்தும், தெருக்களில் குழிகள் உண்டாகும்படி தேரைச் செலுத்தியும், விளைநிலங்களில் வெண்மையான வாயுடைய கழுதையாகிய தாழ்ந்த விலங்கினத்தைப் பூட்டியும் பாழ்செய்தனர். பகைவர்களின் காவல் நிறைந்த நீர்நிலைகளைக் களிறினைக் கொண்டு சேதப்படுத்தினர் என்று புலவர்கள் தலைவனின் சினத்தினைக் குறிப்பிடுகின்றனர். இதனை,

*''கடுந் தேர் குழித்த ஞெள்ளல் ஆங்கண்*
*வெள்வாய்க் கழுதைப் புல் இனம் பூட்டி*
*பாழ் செய்தனை''* (புறம். 15)

என்ற பாடல்வரிகள் மூலம் மூவேந்தர்களின் எழுச்சியையும் தொல் நிலக்கிழமை பூணும் உரிமையையும் அறியலாம். இவ்வாறு

பகைவர்களின் ஊரினையும் விளைநிலங்களையும் தேசதப்படுத்துவதை இனக்குழு மக்களின் கருப்புமாந்திரிகத்தின் எச்சமாகக் கருத இடமுண்டு.

மூவேந்தர்கள் மறத்தின் வழியாகப் பகைவர்களை அழித்து நிலக்கிழமை பூண்டனர். சில குறுநில மன்னர்கள் மூவேந்தரின் அரசினை ஏற்று அவர்களுக்கு அடிபணிந்தனர். இயன்மொழித்துறையில், மலையமான் திருமுடிக்காரி மூவேந்தருள் ஒருவருக்கு வலிமையாகச் செயல்படுவதாகவும் அவனது புகழைப் பிறர் பாடுவதாகவும், புலவர் கூறுகின்றார். (புறம். 172)

தமிழகம் முழுவதற்குமான கோன் ஆக வேண்டும் என்ற மூவேந்தரின் விருப்பத்தையும், மன்னர் மன்னராய் உயர முயன்ற வேந்தரின் நிலையையும் இயன்மொழிப் பாடல்கள் எடுத்தியம்புகின்றன. (புறம். 8)

*''தென்குமரி வட பெருங்கடல்*
*குண குட கடலா எல்லை''* (புறம். 15)

என்ற பாடல்வரிகளில் தென்திசையில் கன்னியையும், வடதிசையில் இமயத்தையும் கீழ்த்திசை, மேல்திசையில் கடலையும் எல்லையாகக் கொண்டு செங்கோலாட்சி புரிபவன் தன்னுடைய தலைவன் என்றும், அவன், பரந்துபட்ட இவ்வையம் பிற வேந்தருக்கும் உரியது என்ற பொதுச் சொல்லை ஏற்காதவன் என்றும் கபிலர் சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதனின் எழுச்சியைக் குறிப்பிடுகின்றார். இவ்வாறு மூவேந்தர்களின் எழுச்சியானது இனக்குழுச் சமுதாயத்தின் அழிவிற்கே வழிவகுத்தது.

## மென்புலத்தில் வன்புலப் பண்புகள் உருப்பெருதல்

மூவேந்தர்களின் ஆதிக்கத்தினால் இனக்குழுச் சமுதாயம் சிதையத் தொடங்கியது. மென்புலமாகிய மூவேந்தர்களின் ஆட்சிப் பகுதியில் இனக் குழுவுக்குரிய அடிப்படைப் பண்பான வீரமும் பகிர்ந்துண்ணுதலும் அருகத் தொடங்கின. இந்நிலையில் புலவர்கள் வீரம், பகிர்ந்துண்ணுதல் போன்ற கருத்துக்களை மன்னனுக்கும், மக்களுக்கும் வலியுறுத்தினர்.

இனக்குழுச் சமுதாயத்தின் நடைமுறை வாழ்க்கையாகக் காணப்பட்ட வீரமும், ஈகைப்பண்பும் மென்புலச் சமுதாயத்தில் புகழ்ச்சிக்குரியதாகவும், தனிச்சிறப்புடையதாகவும் உருப்பெற்றன.

**வீரம்**

இனக்குழுச் சமுதாயத்தில் வீரம் என்பது உடல் வலிமையைக் குறிப்பதாகும். உடல் வலிமையினால் ஒருவன் மிருகங்களை வேட்டையாடி அதன்மூலம் பெற்ற உணவை அனைவருக்கும் பகிர்ந்தளித்தான். இந்நிலையில் அவன் இனக்குழுத் தலைவனாகக் கருதப்பட்டான்.

வேடன் ஒருவன் அம்பினால் பன்றியைக் கொன்று அதன் இறைச்சியைத் தன்னை நாடி வரும் பாணனுக்கு வழங்கியதாக ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகின்றார். (புறம் 177) இவ்வாறு இனக்குழு மக்கள் உடல் வலிமையினால் பெற்ற உணவினைப் பாணர்க்கு வழங்கினர். ஆனால் மென்புலச் சமுதாயத்தில் தங்களுடைய நாட்டின் எல்லையை விரிவுபடுத்துவதற்காகப் போர்க்களத்தில் தங்களது வீரத்தை வெளிப்படுத்தினர்.

புறநானூற்றின் இயன்மொழித் துறையில் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். தங்களது நாட்டின் அகன்ற அரண்களைக் கைப்பற்றி விடுவான் என்று பகைவர்கள் அஞ்சுகின்றனர். பாண்டியனின் நாட்டை கைப்பற்றலாம் என்று விருப்பத்துடன் வந்த பகைவர்கள் இகழ்ச்சியுடன் திரும்பிச் சென்றனர் என்பதன் மூலம் மூவேந்தர்களின் வீரத்தை இயன்மொழித் துறைப்பாடல்கள் மூலம் அறியலாம். இவ்வாறு இனக்குழுச் சமுதாயத்தின் வீர உணர்வு மூவேந்தர்களின் போர்ச்சமூகத்தின் உயர்மதிப்பீடாக உருப்பெற்றது.

**பகிர்வும் ஈகையும்**

இனக்குழுச் சமுதாயத்தில் மக்கள் ஒருவரையொருவர் சார்ந்து வாழ்ந்தனர். தங்களுக்குக் கிடைத்த உணவினை அனைவருடனும் பகிர்ந்து கொண்டனர். அவ்வாறு அவர்கள் பகிர்ந்து கொள்ளக்கூடிய பொருளானது செல்வம் என்ற சொல்லாட்சியில் குறிக்கப்படவில்லை. ஆனால் மூவேந்தர்கள் வழங்கக்கூடிய பொருளானது செல்வமாகக் கருதப்பட்டது.

இவ்வாறு தனக்குக் கிடைத்த உணவினைப் பிறருக்கு கொடுக்கும் பகிர்வு மென்புலச் சமுதாயத்தில் ஈகையாக மாற்றம் பெற்றது. ஈகை என்பது பொருள் உள்ளவன் பொருள் இல்லாதவனுக்குக் கொடுக்கும் செயலாகும். எனவே மென்புலச் சமுதாயத்தில் 'ஈகை' என்ற

கருத்தின் மூலம் சமூகத்தின் ஏற்றத்தாழ்வினை அறியலாம். இதனை, "இனக்குழுவிற்கு இன்றியமையாத பாதீடு" பகிர்ந்துண்ணல் (Sharing of food) என்ற வழக்கம் படிப்படியாக நிலக்கிழமை பூண்ட சமூகத்தில் பயன் கருதி வழங்கிய ஈகை, பரிசில் என்று மாறியது" என்ற ராஜ்கௌதமன் (பாட்டும் தொகையும், தொல்காப்பியமும், தமிழ்ச்சமுதாய அரசு உருவாக்கமும், ப. 100) கருத்தின் வழி அறியலாம்.

## இயன்மொழியும் ஈகையும்

இனக்குழுச் சமுதாயத்தின் பகிர்ந்து உண்ணும் வழக்கம் மென்புல விவசாயத்தில் குறையத் தொடங்கியது. இந்நிலையில் பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் தேவை சங்கப்புலவருக்கு ஏற்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டு புறநானூற்றின் இயன்மொழித்துறைப் பாடல்களை நோக்குங்கால் ஈகை என்னும் பண்பே இயன்மொழித்துறையில் ஐம்பத்தைந்து பாடல்களுள்ளும் அழுத்தமாகப் பரவிக் கிடப்பதைக் காணலாம். இவ்வாறு இயன்மொழித்துறை ஈகை என்னும் கொள்கையைச் சமுதாயத்தில் பரப்பும் நோக்கில் அமைவதை அறியமுடிகிறது. இத்தகைய கொள்கையினை சமூக உளவியல் அடிப்படையில் காணுங்கால், கொள்கைப் பரப்பல் என்னும் சமூக உளவியற்கூறு இயன்மொழித் துறைக்கு விளக்கம் தருகிறது.

ஏதேனும் ஒரு கருத்தைத் திரும்ப திரும்ப எடுத்துரைக்கும் போது, அது மக்கள் மனங்களை விரைவில் சென்றடையும் என்பது இன்றைய ஊடகங்கள் உணர்த்தும் உண்மை. ஊடகங்கள் உற்பத்தியில்லாத சங்க காலச் சமுதாயத்தில் ஈகைத்தன்மை உள்ளவனாக வாழ வேண்டும் என்னும் கருத்தை இயன்மொழித்துறைப் பாடல்கள் பரப்பின. "இரப்போர்க்கு ஒன்று ஈவது மிகவும் சிறப்பாகும்." "தன்னை நாடி வந்தவர்களுக்கு கைம்மாறு கருதாது கொடுப்பவன் மழை மேகம் போன்ற சிறப்புடையவன்." "கொடை மடம் உள்ளவனின் கைகள் மென்மைத்தன்மையுடையன" "புத்தேள் உலகத்தை விடக் கொடுப்பவனின் நாடு சிறந்தது" போன்ற கருத்துக்களை எடுத்துரைப்பதன் மூலம் ஈகை என்னும் கருத்தை இயன்மொழித் துறைப்பாடல்கள் வலியுறுத்துகின்றன.

# செம்மொழிப் பாங்கில் சமயத் தமிழ்

*தமிழாகரர் தெ. முருகசாமி*
புதுச்சேரி

உலகில் காணும் ஆறாயிரம் மொழிகளில் செம்மொழித் தகுதிபெற்ற மொழிகள் ஆறு. அவை தமிழ், வடமொழி, கிரேக்கம், இலத்தீன், ஹீப்ரு, சீனம் ஆகும். இவற்றுள் தமிழ் மட்டுந்தான் உலகத்தமிழ், தெய்வத்தமிழ் எனப் பல்வேறு அடைமொழிகளுடன் கூறப்படும் தனிச்சிறப்பு வாய்ந்த மொழியாக உள்ளது. அந்த அடிப்படையில் தமிழிலக்கியப் பரப்பு முழுவதிலுமுள்ள நூல்கள் செம்மொழி நூல்களாகவே இருந்தாலும் காலப் பழமையானதை அளவாகக் கொண்டு தொல்காப்பியம், மேற்கணக்கு, கீழ்க்கணக்கு நூல்கள், ஐம்பெருங் காப்பியங்கள், முத்தொள்ளாயிரம் போன்றவற்றை மட்டும் செம்மொழி இலக்கியங்கள் எனப்பட்டன.

எனினும் சங்கம் மருவிய காலத்திற்குப் பின்னும் சமய வளர்ச்சி காலத்திற்கு முன்னுமாகிய கி.பி. 2 முதல் 5 ஆம் நூற்றாண்டு வரையான காலத்தில் தமிழகத்தைக் கவ்விய இருள் எல்லா நிலைகளிலும் படிந்திருக்கிறது. மொழியின் வளர்ச்சி தளர்ச்சியுற்றதோடு சமண பௌத்த சமயங்களால் தமிழ் மக்களின் வாழ்வில் பல மாற்றங்கள் உருவாயின. மருளாகிய இந்நிலையை மாய்ப்பதற்குச் சைவ வைணவ சமயங்களின் எழுச்சி காரணமாயிருந்தது. இதனால் பழந்தமிழ் உணர்வுகளான அகப்புறக் கோட்பாடுகள் நாயக நாயகி பாவனையாகவும் போர் குறித்த புராணக் கதையாகவும் செம்மொழித் தமிழ் சமயத் தமிழாகப் பரிணமித்தது.

வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம் எனப்பட்ட நிலையாமைக் கருத்து ''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை'' என்ற ஞானசம்பந்தரின் அறைகூவல் ''உண்டாலம்ம இவ்வுலகம்'' என்ற செம்மொழிச் சாயலில் வாழ்க்கையின் நம்பிக்கையை வளர்த்தது. பெண்ணின் நல்லாளுடன் பெருந்தகை இருந்ததே என்ற அவர்தம் முழக்கமும் ஆணும் பெண்ணும் ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை என்ற செம்மொழிச் சார்பில் துறவைத் துண்டித்த இல்லறத் துய்ப்பைத் தூண்டியது. சைவ நாயன்மார்களும்

வைணவ ஆழ்வார்களும் ஓரிடத்திலேயே இருந்து விடாமல் இடம் விட்டு இடம் பெயர்ந்தது திருத்தலப் பயணமாகச் சென்று புறச்சமயப் புன்மைகளைத் தம் தெய்வத் தமிழால் புறந்தள்ளிய மௌனப்போராட்டத்தால் திருமுருகாற்றுப்படையிலும் பரிபாடலிலும் உணர்த்திய சிவனிய, திருமாலிய அன்புநெறிகள் மறுமலர்ச்சி பெற்றன.

ஆயிரம் உண்டிங்கு சாதி, இதில் அந்நியர் வந்து புகலென்ன நீதி எனக் கூறிய பாரதியாரின் கூற்றிற்கிணங்க இங்குள்ள சைவ வைணவச் சமயங்கள் தம்முள் முரண்பட்டுக் கொண்டாலும் இருவர்க்கும் பொதுவானதாக இருந்த தமிழ்மொழியைக் காப்பதில் கண்ணும் கருத்துமாகவே இருந்தனர் என்பதைத் தமிழ்கூறு நல்லுலகம் நன்றியோடு உணரக் கடமைப்பட்டுள்ளது எனலாம்.

இறைவனைச் சுந்தரர் பண்ணிடைத் தமிழொப்பாய் என்கிறார். தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானை என்கிறார் மணிவாசகர். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்புபவர் எனப் பாராட்டப் பெற்ற ஞானசம்பந்தர், ''பாரின் மலிகின்ற புகழ் நின்ற தமிழ் செப்புமவர் சிவலோகம் சேர்வர்'' எனத் தமிழின் அருமையை விளக்கி அத்தமிழ் இறைவனிடம் இட்டுச் செல்லும் செம்மொழி எனப் பிரகடனப் படுத்தினார். தேவாரம் பாடிய மூவரும் தமிழை இயலாக மட்டும் வளர்க்காமல் தொல்காப்பியர் ''தெய்வம் உணாவே மா மரம் புள் பறை செய்தி யாழின் பகுதி'' எனக் கருப் பொருள் பட்டியலில் கூறும் இசையைத் தமிழாக வளர்த்தார்கள். இதனால் தமிழில் பண்ணாராய்ச்சி வளர்ந்தது. மேலும் பண் சுமந்த பாடலுக்குப் பரிசு படைத்தருளும் வள்ளலாக இறைவனைத் துய்த்ததுபோல வைணவத்தில் ஆழ்வார்களும் பரந்தாமனைத் தமிழாகவே கண்டார்கள்.

*வித்தகன் விட்டு சித்தன் விரித்த தமிழிவை*
*எத்தனையும் சொல்ல வல்லவர்க் கிடரில்லையே*

என்று பெரியாழ்வாரும்,

*கோதை சொல், தூய தமிழ்மாலை ஈரைந்தும்*
*வல்லவர் வாயும் நன்மக்களைப் பெற்று மகிழ்வரே*

என்று ஆண்டாள் நாச்சியாரும்,

*குலசேகரன் சொற்செய்த நடைவிளங்குதமிழ்*
*மாலை பத்தும் வல்லார் நலந்திகழ் நாரணன்*
*அடிக்கீழ் நண்ணுவரே*

என்று குலசேகர ஆழ்வாரும் பாடிக் குவித்தவை யாவும் செம்மொழித் தமிழைத் தெய்வத் தமிழாகக் கண்ட சீர்மை எனலாம்.

இம்மட்டோடன்றித் திவ்விய பிரபந்த நாலாயிரத்துக்குப் பேருரை (வியாக்கியானம்) கண்டெழுதியவர்கள், மணிப்பிரவாள நடையில் (கலப்பு மொழியில்) எழுதினாலும் தமிழ் மணத்தோ டெழுதிய சிறப்பை என்னென்பது ! உயர்வற உயர்நலம் உடையவன் எவன் அவன் என்ற நம்மாழ்வார் பாடலுக்கான பேருரை ஒன்றே ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் எனலாம். நாலாயிரத்துள் நம்மாழ்வாரின் ஆயிரம் - சிறப்பு. இந்த ஆயிரத்துள் முதல் முந்நூறு - சிறப்பு. இம் முந்நூற்றுள் முதல் நூறும், முதல் நூற்றில் முதல் பத்தும், முதல் பத்தில் முதல் பாடலும், முதல் பாடலில் முதல் வரியும், முதல் வரியில் முதல் சீரான உயர்வற என்பது நாலாயிரத்தையும் நாராயணனையும் உணர்த்திக் காட்டும் ஒட்பமுடைய செஞ்சொல் என்பதாக எழுதிய பாங்கு வையம் புகழும் வளர்தமிழ்ப் பாங்கன்றோ?

காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பல்லவ நாட்டை ஆண்ட மன்னன் ஒருவன், கணிகண்ணன் என்னும் தமிழ்ப்புலவரை மதிக்காமையால் அவர் காஞ்சியை விட்டுப் புறப்படுகையில், அங்குள்ள மணிவண்ணனிடம் விண்ணப்பித்துச் சென்றபடி அவர் பின்னே பரந்தாமன் சென்று விட்டான். இதனால் மறுநாள் பூசை நடைபெறத் தடையாயிருந்ததைக் கேட்ட மன்னன் தன் தவற்றினை உணர்ந்து மீண்டும் அப்புலவரை வரவழைத்தபோதும் அவர் பாடியதால் பரந்தாமன் கோயிலில் பள்ளி கொண்டதாகக் கூறும் வரலாறு தமிழுக்குத் தெய்வம் கட்டுப்பட்டதை உணர்த்துவதாக உள்ளது. புலவர்,

*கணிகண்ணன் போகின்றான்*
*காமருபூங் கச்சி*
*மணிவண்ணா நீகிடக்க*
*வேண்டா - துணிவுடைய*

*செந்நாப் புலவன்யான்*
*செல்கின்றேன் நீயுமுன்*
*பைந்நாகப் பாய்சுருட்டிக்*
*கொள்!*

என்ற பின், இப்பாடலையே மாற்றி,

*கணிகண்ணன் போக்கொழிந்தான்*
*காமருபூங் கச்சி*
*மணிவண்ணா நீகிடக்க*
*வேண்டும் - துணிவுடைய*
*செந்நாப் புலவன்யான்*
*போக்கொழிந்தேன் நீயுமுன்*
*பைந்நாகப் பாய்விரித்துக்*
*கொள்!*

எனப் பாடியதற்குப் பரந்தாமன் கட்டுப்பட்ட நிகழ்வைக் குமரகுருபர சுவாமிகள் "பைந்தமிழ் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலே" என மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழ் திருமால் வணக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

மதுரை மீனாட்சியைக் குருபரர் "துறைத்தீம் தமிழின் ஒழுகு நறுஞ்சுவை" எனத் தமிழ் மயமாகவே கூறுகிறார். கயிலாயத்தை இருப்பிடமாகக் கொண்ட சிவபெருமான், தமிழ்க் கூட்டுண்ணும் ஆராவேட்கையால் தன் மனைவி மக்களோடு மதுரையில் தங்கிவிட்டாரென மதுரைக் கலம்பகத்தில் குருபரர் பாடுகிறார். இப்படித் தமிழ் அருச்சனையான தோத்திரப் பாடல்களன்றிச் சாத்திர நூல்களிலும் தெய்வத்தைத் தமிழோடு சார்த்திப் பார்க்கும் அளவில் சமயத் தமிழுக்கான செம்மொழிப் பங்களிப்பை உணரலாம்.

அகர முதல் னகர இறுவாய் என்ற மொழி இலக்கணக் கருத்து, அகர உயிர்போல் இறை நிற்கும் என்கிறது திருவருட்பயன் என்னும் மெய்கண்ட நூல். தன்னை இறைவன் படைத்ததே அவனைத் தமிழால் பாடுதற்காம் எனக் கூறுகிறார் திருமூலர். இங்ஙனமாகக் கூறப்பட்டவை யாவும்

தொன்மையான நூல்களின் அச்சு மாறாமல் கூறப்பட்ட மறுவாசிப்பான கருத்து எனலாம். இவை எல்லாவற்றிற்கும் மேலாகச் சமய உலகில், அருந்தமிழால் பிறவி கேட்ட சிவப்பிரகாசரின் வேண்டுதல், சமயத் தமிழைச் சதுரத் தமிழாக்கிய புதுமை எனலாம்.

*விரைவிடை இவரும் நினைப்பிற வாமை*
*வேண்டுநர் வேண்டுக; மதுரம்*
*பெருகுது தமிழ்ச்சொல் மலர்நினக் கணியும்*
*பிறவியே வேண்டுவன் தமியேன். (39)*

இது சிவப்பிரகாசர் பாடிய சோணசைவமாலைப் பாடலாகும். பிறவியே வேண்டாம் என வேண்டுவோர் பலறிருக்க சிவப்பிரகாசரோ வேண்டும் எனக் கேட்பது புதுமையாக உள்ளது.

எடுத்த பொற்பாதம் காணப் பெற்றால் என்றும், மீண்டும் பிறப்புண்டேல் என்றும் முறையே அப்பரும் காரைக்காலம்மையாரும் வேண்டியதைப் போல் அதாவது இப்படியிருந்தால் பிறவிகொடு எனக் கேட்டதைப் போலல்லாமல் எனக்குப் பிறவியை அதுவும் மதுரத் தமிழால் பாடும் பிறவியைக் கேட்கிறார் சிவப்பிரகாசர். இறைவன் அவருக்குப் பிறவியைக் கொடுத்தே ஆக வேண்டிய கட்டாயத்தில் உள்ளார் என்பதைப் 'பிறவியே' எனக் கூறிய தேற்றேகாரத்தால் அறியமுடிகிறது. சிவப்பிரகாசர் கேட்ட தமிழ்ப் பிறவியை அண்ணாமலையாராகிய சிவபெருமான் கொடுக்காமல் இருந்து விட மாட்டானென்ற நுட்பம் சிவப்பிரகாசர் அறிந்தவர் என்பதால் சிவன் கொடுப்பதின்றும் தப்பிக்க முடியாத பக்தி வலைக்குள் சிக்கிக் கொண்டார் என்பது ஈண்டுள்ள பொருள் நுட்பமாகும். ஏனெனில் தமிழுக்காகவே அலைந்து திரிந்த சிவபெருமானின் பாடெல்லாம் (துன்பங்களெல்லாம்) சமயக் குரவர் நால்வர் வரலாற்றால் சிவப்பிரகாசர் நன்கறிந்தவராதலால் அந்த எளிவந்த இலக்கணத்தைக் கொண்டு இறைவனைப் "பிறவியே வேண்டுவன் தமியேன்" என இறுகப் பற்றிக் கொண்டார் என்பதே உண்மையாகும்.

திருவரங்கத்தில் அரங்கன், தென் திசை நோக்கிப் படுத்திருப்பதும் மதுரையில் மன்னிய சிவன், தென் நோக்கி ஆடுவதும் தென்றலொடு பிறந்த தமிழை மாந்துதற்கெனத் தெய்வங்களைத் தமிழ் மொழிக்குள் அடைத்துத் துய்க்கும் துப்பு (அறிவின் வலிமை) தமிழுக்கு உள்ளது போல் செம்மொழி எனப்படும் வடமொழியில் இல்லாததால் செம்மொழித் தமிழின் செவ்வியலான தெய்வீகத்தை என்னென்பது !

# சேதுபதி செப்பேடுகள்

செம்மொழி மாநாட்டுப் புத்தகக் கண்காட்சிக்குப் போயிருந்தபோது, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக அரங்கில் பல அரிய நூல்கள் இருந்தது பார்வையில் பட்டது. வேறு பல அரங்குகளில் கையில் இருந்த பணத்துக்கெல்லாம் புத்தகங்களை வாங்கிவிட்டிருந்ததால், புரட்டிப் பார்த்து மகிழ்ந்தபடி நகர்ந்துவிட்டேன். அங்கிருந்த ஒரு புத்தகம், 'என்னை இன்னும் படிக்காமல் இருக்கிறாயே' என்று தூக்கத்தில் அடிக்கடி வந்து இம்சிக்கத் தொடங்கிவிட்டது.

அந்தப் புத்தகத்தின் தலைப்பு 'சேதுபதி செப்பேடுகள்'. அதைத் தொகுத்திருப்பவர் சாதாரண மனிதரல்ல. தமிழ்மண் போற்றித் துதிக்கத்தக்க ஆய்வுகளை மேற்கொண்டு, தமிழ்ச் சமுதாயத்தின் சிறப்புகளைப் பதிவு செய்ய உதவியிருக்கும் மாபெரும் ஆய்வாளர். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கல்வெட்டியல் துறையின் தலைவராக இருந்து, அரிய பல ஆய்வுகளை மேற்கொண்டு மொழி ஆராய்ச்சிக்கு வளம் சேர்த்தவர். பெயர் புலவர் செ. இராசு.

எங்கள் நிருபர் கதிரவனின் உதவியால், தஞ்சையிலிருந்து 'சேதுபதி செப்பேடுகள்' நூலை வாங்கிப் படித்து விட்டேன். ராமநாதபுரம் சேதுபதி மன்னர்களுடன் தொடர்புடைய செப்பேடுகள், அவர்களது பின்னணி என்று ஒன்றைக் கூட விடாமல் பதிவு செய்ய இந்த நூல் முயன்றிருக்கிறது.

*'வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்'* என்று அகநானூறும், 'போரெனில் புகலும் புனைகழல் மறவர்' என்று புறநானூறும் போற்றும் தமிழகத்தின் தொன்மைச் சிறப்பு வாய்ந்த மறவர் இனத்தைச் சேர்ந்தவர்கள்தான் சேதுபதிகள் என்பதும் செம்பிநாடு என்னும் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதால், இவர்கள் செம்பிநாட்டு மறவர் என்று வழங்கப்பட்டதாகவும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. 'செம்பியன்' என்பது சோழர்களின் பெயர் என்பதால் இவர்கள் சோழர்களோடு தொடர்புடையவர்களாக இருக்கக்கூடும்.

கி.பி. 1059-இல் சோழர்கள் இலங்கை மீது படையெடுத்தபோது, பாதுகாப்புக்காக ராமநாதபுரம் கடற்கரை ஓரமாக ஒரு படையை

நிறுத்தினர் என்றும், அந்தப் படைத் தலைவனின் வழி வந்தவர்கள்தான் பின்னாளில் சேதுபதிகள் என்னும் சிறப்புப் பெயர் பெற்றார்கள் என்றும், 1972-ஆம் ஆண்டு ராமநாதபுரம் கெஜட்டியர் கூறுகிறது. இன்றைய சேதுபதி அரசு மரபு 1604-1605-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்து.

சேதுபதி மன்னர்கள் தொடர்புடைய செப்பேடுகள், தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் முதலிய சைவ மடங்களிலும், திருப்பெருந்துறை, அழகர்கோயில், கீழக்கரை, ராமநாதபுரம், திருவாரூர், திருப்புல்லாணி, பெருவயல் முதலிய ஊர்க்கோயில்களிலும், சில கோயில் அர்ச்சகர்களிடமும், தனியார் வசமும், அருங்காட்சியகங்கள், பள்ளிவாசல்கள் என்று பல்வேறு இடங்களிலும் காணப்பட்டன.

இந்தச் செப்பேடுகளைத் திரட்டும் முயற்சியில் முதன் முதலில் ஈடுபட்டவர்கள், ஜேம்ஸ் பர்கஸ், எஸ்.எம். நடேச சாஸ்திரியார் என்கிற இரட்டை ஆய்வாளர்கள். அவர்கள் 1886-இல் வெளியிட்ட நூலில் 16 செப்பேடுகள் இடம்பெற்றன. 1975-இல் வெளியான ராமேஸ்வரம் குடமுழுக்கு விழா மலரில் 23 செப்பேடுகள் வெளிவந்தன. ராமநாதபுரம் டாக்டர் எஸ்.எம்.கமால் பல்வேறு இடங்களில் கள ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு, சேதுபதி மன்னர்கள் தொடர்பான அரிய பல செப்பேடுகளைத் தொகுத்து அளித்திருக்கிறார். கோவை கருணானந்தம், மேலப்பனையூர் ராசேந்திரன், காரைக்குடி பேராசிரியை நா. வள்ளி ஆகியோரும் பங்களிப்பு நல்கி இருக்கிறார்கள்.

பெரும்பான்மையான செப்பேடுகள் நீள் சதுர வடிவிலானவை (20 x 32 செ.மீ.) பெரும்பாலான செப்பேடுகளில் தமிழுடன் கிரந்த எழுத்துகள் கலந்துள்ளன. திருமலை சேதுபதியின் காலத்துக்கு முற்பட்ட செப்பேடுகள் தமிழிலும், அவருக்குப் பிற்பட்ட செப்பேடுகள் தெலுங்கிலும், கையெழுத்தும், இறைவணக்கத் தொடரும் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பல செப்பேடுகளில் அழகிய வரைகோட்டு ஓவியங்கள் வரையப்பட்டிருக்கின்றன.

பல செப்பேடுகள் அரச குடும்பத்தினர் அந்தணர்களுக்கும், கோயில் அர்ச்சகர்களுக்கும் கொடுத்த கொடைகள் பற்றிக் கூறுகின்றன. சில செப்பேடுகள் நில விற்பனை, மக்கள் குடியேற்றம், காணியாட்சி பெறுதல், கொலை வழக்கு போன்ற செய்திகளையும், மூன்று செப்பேடுகள் பெண்களைச் சிறையெடுத்தது தொடர்பானவையும், சில முத்துக் குளித்தல், வணிகம் தொடர்பானவையுமாகக் காணப்படுகின்றன.

இந்தச் செப்பேடுகளின் மூலம் சேதுபதிகள் காலச் சமயம், சமூகம், வணிகம், பொருளாதார நிலை, வேளாண்மை, குற்றங்கள், தண்டனை, நாணயமுறை, அளவுமுறை, நீர்நிலைகள், நாட்டுப்பிரிவுகள், சேதுபதிகள் குடும்பம், திருமண உறவுகள், காடழித்து நாடாக்குதல் போன்ற பல்வேறு செய்திகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

ஆணைகளை முதலில் ஓலையில் எழுதிப் பிறகுதான் செப்பேட்டில் பொறித்தனர் என்பதை ஓலையில் எழுதியவர் பெயரும் செப்பேட்டில் எழுத்துக்களைப் பொறித்தவர் பெயரும் எழுதப்பட்டிருப்பதால் அறிகிறோம். பெரும்பான்மையான செப்பேடுகளில் இருபுறமும் எழுதப்பட்டுள்ளன.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் 172-வது வெளியீடான இந்தப் புத்தகம், 8-ஆம் உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிடப்பட்டது என்று தெரிகிறது. அதுசரி, தஞ்சைப் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் வெள்ளியீடே புலவர் செ. இராசுவுடையதுதான் என்பது தெரியுமா? அந்தப் புத்தகம் - தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் !

*நன்றி : தினமணி 25-07-2010*

* * *

# பதிற்றுப் பத்தில் எண்ணியல் சிந்தனை

*முனைவர் கி. இராசா*
பாரதிதாசன் பல்கலைக் கழகம்

சங்க இலக்கியத் தொகுப்புகளுள் பதிற்றுப்பத்து தனக்கெனப் பல சிறப்புக்களை உடையது. சேர அரசர்களை மட்டும் பாடும் இலக்கியம்; ஒரு அரசருக்குப் பத்துப் பாடல்கள் வீதம் 10 அரசர்களுக்கு 100 பாடல்கள் என்று குறிப்பிட்ட எண்ணிக்கை வரையறை உடைய இலக்கியம்; சேரர் குல வரலாற்றை அறிய உதவும் இலக்கியம்; தூக்கு, வண்ணம் முதலிய பாடு நெறிகளைக் கொண்ட இலக்கியம்; அரசரோடு அரசமா தேவியரையும் இணைத்துப் பாடும் இலக்கியம்; புறச் செய்திகளோடு அகச் செய்திகளையும் ('சிறு செங்குவளை' போன்ற) இழைத்துத்தரும் இலக்கியம். இப்படிப் பல சிறப்புகள் பதிற்றுப்பத்துக்கு உண்டு. இதனோடு எண்களைக் குறிப்பிட்டுப் பாடுவதிலும், எண்ணுமுறையைச் சொல்வதிலும் பல புதிய செய்திகளைத் தருவது பதிற்றுப்பத்து. இவற்றோடு எண்களைப் பற்றிய சிந்தனையும் பதிற்றுப்பத்தில் செல்வாக்குப் பெற்றுள்ளது. ஒன்று, இரண்டு, மூன்று என எண்ணும் வரிசை முறையும், பல, தொகுதி, கருவி, ஈரைப்பதின்மர் என்பது போன்ற தொகுப்பு எண்ணு முறையும், 'எண்ணற்ற, 'வரம்புகடந்த' என்பன போன்ற எண்ணிக்கை கடந்த நிலையும் பதிற்றுப்பத்துப் பாடல்களில் காணப்படுகின்றன.

**முழுமுதல் :** அனைத்து ஆற்றல்களும் ஒருங்கே கைவரப் பெற்ற அழிக்க வொண்ணார், பேராற்றலை 'முழுமுதல்' என அழைப்பது தமிழ் மரபு. அதிலும் குறிப்பாக 'சூர்' என்ற கொடுந்தெய்வத்தின் ஆற்றல் (Satan) அளவிடற்கரியது. 'சூர்' என்பதன் விரிவாகச் சூரபன் மாவைக் குறிப்பிடுவர். இந்தச் சூரபன்மா குதிரை முகமும், மனித உடலும் கொண்ட அசுர வடிவமாகும். இதனையே 'இருபேர் உருவான ஒருபேர் யாக்கை' என்று திருமுருகாற்றுப்படை (57) குறிப்பிடுகிறது. இதனை அழிக்க வல்லவன் முருகன் ஒருவனே. சூரபன்மனை அழிப்பதற்காகவே சிவபெருமான் முருகனுக்கு அற்புதமுறையில் உருத்தந்தார் என்பது புராண வரலாறு. மிகக் கடுமையாக நடந்த போரினை பண்டையத் தமிழ்

இலக்கியங்கள் சூரபன்மாவை முருகவேள் அழித்த நிகழ்ச்சிக்கு ஒப்பிட்டுக் காட்டின. பதிற்றுப்பத்திலும் இந்நிகழ்ச்சி சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர் கண்ணனார் பாடிய 2ஆம் பத்தின் முதற்பாடல் அவன் யானை மீது ஊர்ந்து சென்று பகைவரது காவல் மரத்தை வென்றழித்த திறத்தைப் பாடுகிறது.

*"சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்*
*கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்கு* (56)

என்று முருகப் பெருமான் சூரபன்மாவின் சின்னமாகிய மாமரத்தை அடியோடு வெட்டிச் சாய்த்த நிகழ்ச்சியை,

*"கடியுடை முழுமுதல் துமிய ஏஎய்*
*வென்றெறி முழங்குபணை செய்த வெல்போர்"* (13-14)


என்று இமயவரம்பன் பகைவரது காவல் மரங்களை வெட்டிச் சாய்த்த நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார். அடுத்த பாடலில் இதே நிகழ்ச்சியை 'கடம்பு முதல் தடிந்த கடுஞ்சின வேந்தே' (12:3) என்று குமட்டூர் கண்ணனார் பாடுகிறார்.

முருகப்பெருமான் சூரபன்மாவின் மாமரத்தை அடியோடு வீழ்த்திய செய்தி, குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர்கிழார் பாடிய ஒன்பதாம் பத்திலும் இடம் பெற்றுள்ளது. இங்கு இளஞ்சேரல் இரும்பொறையை முழுமுதல் தடிந்த முருகப் பெருமானாகவே காண்கிறார் பெருங்குன்றூர்க் கிழார்.

அணங்குடைக் கடம்பின் முழுமுதல் தடிந்து' (88:6) என்று இளஞ்சேரல் இரும்பொறை முழுமுதல் தடிந்ததாகப் பாடுகிறார்.

## ஏழு

சங்க இலக்கியங்களில் அதிகமாக இடம்பெற்றுள்ள எண்களுள் முதலாவதாகக் கருதக்கூடியது ஏழு என்ற எண்ணாகும். ஏழ்பிறப்பு, ஏழிசை, ஏழு தலைமுறைகள், ஏழு நாட்கள், ஏழு உலகங்கள் என்றிவ்வாறு ஏழு என்ற எண்ணின் பட்டியல் நீள்கிறது. ஏழு என்பதை எந்தவித அதிர்வுகளாலும் பாதிப்படையாத ஒருவெண் என்பார்கள். புலன்உரு, நுண்உரு, ஆவிஉரு என்ற முத்தன்மைகள் கொண்ட உடலையும், உள்ஒளி, அறிவொளி, மனம் என்ற முத்தன்மைகள் கொண்ட உள்ளத்தையும் இணைத்து ஆட்டுவிக்கின்ற ஏழாவது எண்ணாக 'நான்' (ego) என்ற தன் முனைப்புத் திகழ்கிறது என்று மறைஅறிவியல் (Occult Scicence) நூலார் கருதுவர்.




உலக இலக்கியங்களில் அனைத்திலும் 'ஏழு' என்ற எண்ணுக்குத் தனிச் சிறப்பிடம் உண்டு. தமிழிலும் கடையெழு வள்ளல்கள் என்ற சிறப்பு வழிவழியாகப் போற்றப்படுகிறது. அதேபோன்று ஏழு மன்னர்களை வென்ற சிறப்பும் பலபடப் பாராட்டப்படுகிறது.

சங்க காலத்தில் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மிக இளையவனாக இருந்தபோதே தன்னை எதிர்த்து வந்த ஏழு மன்னர்களைப் போரிட்டு வென்ற செய்தி பரபரப்பாகப் பேசப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் கடையெழு வள்ளல்களைப் பற்றிய செய்தி பிற்காலத்தில் தொன்மப் பண்பினை ஏற்றது போல, 'ஏழு மன்னர்களை வென்ற' செய்தி சங்க காலத்திலேயே தொன்மப் பண்பினை ஏற்றிருக்க வேண்டும். அதனால்தான் ஏழு மன்னர்களைப் போரில் வென்று அவர்தம் மகுடங்களால் செய்யப்பட்ட ஆரத்தையும் முடியையும் அணிந்ததாகப் பாடல் தலைவர்கள் போற்றப் பெற்றனர். இச்சிறப்பு சேரமன்னர்கட்கும் சங்க காலத்திலேயே உரியதாயிற்று.

சேரமன்னர்களைக் குறித்துப் பாடப்பெற்ற பதிற்றுப் பத்துப் பாடற் தொகுதியில் எழுமுடி, எழுமுடி அகரம் என்பன குறிப்பிடப்படுகின்றன.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஏழு அரசரை வென்று அவர்களது முடியாற் செய்த ஆரத்தை அணிந்தவன் எனும் சிறப்புத் தோன்ற,

*'எழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்து'* (14:11)

என்று போற்றப்படுகின்றன. இதற்கு 'எழுமுடியென்பது ஏழு அரசர்களை

வென்று அவர்கள் ஏழு முடியானுஞ் செய்ததோர் ஆரமாம்' என்று பழைய உரைகாரர் உணரக் குறிப்பு எழுதியுள்ளார்.

இதே பாடற்குறிப்பு இவனைப் பற்றிய மற்றொரு பாடலிலும் இடம் பெற்றுள்ளது (16 : 17). இத்தொடர் அக்காலத்திலேயே தொன்மத் தன்மை எய்தியது என்பதை உறுதி செய்யும் சான்றாக, களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைப் பாராட்டவும் பயன்பட்டுள்ளது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் போன்றே, அவனுக்கு நூறாண்டுக்குப் பின்னர் (இமயவரம்பன் ஆட்சியாண்டு 58, பல்யானை செங்குட்டுவன் ஆட்சியாண்டு 25, நார்முடிச் சேரல் ஆட்சியாண்டு 25) அரசாண்ட நார்முடிச் சேரலுக்கும் காப்பியாற்றுக் காப்பியனார் எழுதும் கெழீஇய திருஞெம ரகலத்து (40:13) எனும் பெருமையத் தருகிறார். இதற்குப் பகையரசரது ஏழு கிரீடங்களாற் செய்த ஆபரணம் பொருந்திய என்று பழைய உரைகாரர் விளக்கம் தருகிறார்.

இவனுக்குப் பிறகு அரியணையேறிய கடற்பிறக்கோட்டிய செங்குட்டுவனை 'எழுமுடி மார்பின் எய்திய சேரல்' என்று (45:6) பரணர் பாராட்டுகிறார். இவ்வாறு ஏழு மன்னர்கள் யார் யார் என்ற குறிப்பு தலையாலங்கானத்துப் போரில் தெளிவாகக் குறிக்கப்பட்டது போல சேரர்கள் எந்த ஏழு மன்னர்களை வென்று அவர்களது கிரீடங்களை அழித்து மார்பில் அணிந்தார்கள் என்ற குறிப்பு இல்லை. ஆனால் இது மீண்டும் மீண்டும் வரும் கருத்தாகப் பதிற்றுப்பத்தில் இடம் பெற்றுள்ளது.

## ஐந்து

பொதுவாக ஐந்து என்று சொல்லும் பொழுது ஐம்பூதங்கள், இறைவனின் ஐந்தொழில்கள், ஐந்தலை நாகம் ஆகியவை முன்நிறுத்தப் பெறுகின்றன. ஆனால் பதிற்றுப்பத்தில் ஐந்து கோள்கள் என்ற புதிய செய்தி காணப்படுகின்றது.

*'நீர்நிலம் தீவளி விசும்போ டைந்தும்*
*அளந்து கடை யறியினும் அளப்பருங் குரையநின்*
*வளம் வீங்கு பெருக்கம்'* (24 : 15-17)

என்று மூன்றாம் பத்தின் நான்காம் பாடல் ஐம்பூதங்களையும் ஒருங்கிணைத்துப் பாடுகின்றது.

இமயவரம்பன் நெடுஞ்சேரன்தனைக் குமட்டூர் கண்ணனார் தாம் பாடிய இரண்டாம் பத்தில்,

*'நான்கோள் திங்கள் ஞாயிறு கனைஅழல்*
*ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை''* (13:4-5)

என்று பாராட்டுகிறார். இங்கு 'ஒன்பது கோள்களில் விளக்கமில்லாத இரண்டு கோள்களாகிய இராகு, கேது என்னும் இரண்டும் நீக்கி, எழுச்சியுள்ள ஏழுகோள்களில் விளக்கம் மிகுந்த திங்கள், சூரியன் எனும் இரண்டு கோள்கள் போக ஐந்து கோள்களாகிய செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய ஐந்தும் ஒன்றாகச் சேர்ந்த என்று பழைய உரைகளால் விளக்கம் தருகிறார்.

ஐந்து என்ற எண்ணோடு,

*''சொல் பெயர் நாட்டம் கேள்வி நெஞ்சம் என்று*
*ஐந்துடன் போற்றி அவை துணையாக'* (21:1-2)

என்று சொல், பெயர், நாட்டம், கேள்வி, நெஞ்சம் என்பனவற்றைத் தொடர்புபடுத்துகிறார் மூன்றாம் பத்துப் பாடிய பாலைக் கௌதமனார்.

இங்குக் குறிப்பிடப்படுபவை அறிவு பெறுவதற்கான கால்களும், ஐம்புலமைக்களும் ஆகும். ''சொல் என்பது சொல்லிலக்கணத்தையும், பெயர் என்பது பொருளிலக்கணத்தையும், நாட்டம் என்பது சோதிடம் பற்றிய அறிவையும், கேள்வி என்பது வேதம் பற்றிய அறிவையும், நெஞ்சம் என்பது இந்திரியங்களின் வழி ஓடாது உள் அடங்கிய தூய நெஞ்சத்தையும் குறித்தது'' என்று பழைய உரைகளால் விளக்கம் தருகிறார். இதில் 'நாட்டம்' என்பது சோதிட நூல் அறிவு என உரைகளால் குறிப்பிடுவது அவரது காலத்தில் சூரல் எனலாம். மாறாக, 'நாட்டம்' என்பது ஆராய்ச்சி மனப்பான்மையையே இங்கு குறித்தது என்பதுவே பொருந்தும். நாட்டை ஆளும் மன்னருக்கு ஆராய்ச்சித் திறம் வேண்டற்பாலதாகும். அதுவே இங்கு 'நாட்டம்' என்று குறிப்பிடப்படுகிறது. மேலும் 'நாட்டம்' எனும் தொல்காப்பியப் பொருளதிகாரத் தொடருக்குப் பேராசிரியர் தரும் உரையும் இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது.

## நான்கு

பொதுவாக நான்கு என்ற எண் பண்டைத் தமிழ் இலக்கியத்தில் அரிதாகவே பயின்று வருகிறது. 2, 3, 5 ஆகிய எண்களின் பயிற்சியைப் பார்க்க நான்கு என்ற எண்ணின் பயிற்சி சங்க இலக்கியத்தில் குறைவாகவே காணப்படுகிறது. பின்வரும் சான்றில் பொதுவாக ஐம்பூதங்களைக் கூட்டிச் சொல்லும் மரபில் ஒன்றைக் குறைத்து நான்காகச் சொல்லும் புதுப்போக்குப் காணப்படுகிறது.

*''நிலம்நீர் வளிவிசும்பு என்ற நான்கின்*
*அளப் பரியை யே......* (14:1-2)

இச்சான்றினைக் கூர்ந்து நோக்கினால் இந்த நாற்பூதங்களும் அளவின் எல்லைக்குச் சான்றாக அமையக் காணலாம். உ.வே.சா. அவர்களின் குறிப்புரையில் 'நிலத்தின் பரப்பும், நீரின் ஆழமும், வளியின் செலவும், விசும்மின் ஓக்கமும் அளப்பரியவை ஆதலின் அவற்றை உவமை கூறினார்'' என்ற விளக்கம் காணப்படுகிறது. குறுந்தொகைப் பாடலொன்றில் தன்னுடைய காதலின் அளவீட்டத்தைத் தோழியிடம் சொல்லும் தலைவி ''அது நிலத்தைவிடப் பரந்தது; நீரைக் காட்டிலும் ஆழமானது; விண்ணைக் காட்டிலும் உயரமானது என்று உவமை சொல்வது போல, புறப்பாடலாகிய பதிற்றுப்பத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் ஆற்றல் அளவிடற்கரியது என்பதற்கு நிலம், நீர், வளி, விசும்பு ஆகியவற்றை உவமையாகச் சொல்லும் திறம் நினைந்து இன்புறுதற்குரியது.

## மூன்று

மூன்று எனும் எண்ணிக்கை தமிழில் புகழ் பெற்றுள்ளது. ஆயினும் பதிற்றுப்பத்தில் ஓரிரு பாடல்களில் மட்டுமே இவ்வெண் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

*'வெண்டிரை முந்நீர் வளைஇய உலகத்து'* - (31:22)

'முந்நீர்' எனும் சொல், ஆற்றுநீர், ஊற்று நீர், மழைநீர் ஆகிய மூன்றும் சேர்ந்த கடல்நீரைக் குறித்தது.

## இரண்டு

இருவகையான காட்சிகளைக் காட்டுமிடத்து 'இரண்டு' என்ற சொல் பதிற்றுப்பத்தில் பயின்று வந்துள்ளது. பல்யானைச் செல்கெழு குட்டுவன் நாட்டில் இருவகையான புகை எழுவதைக் காண்கிறார் பாலைக்கௌதமனார். ஒன்று 'பெரும் பெயர் ஆவுதி' இது வேள்விப்புகை; மற்றது 'அடுநெய் ஆவுதி' இது சமையற் புகை. இதற்கு விளக்கம் தரும் உ.வே.சா. அவர்கள், 'கொள்கையினாலும், வாய்மொழியினாலும் கடவுளைப் பேணும் பொருட்டு எடுத்துக் கொண்ட வேள்வித்தீயின் ஆவுதியும், வருவார் வரவேண்டியும், விருந்தினர் உண்ண வேண்டியும், அழித்த குறை ஆர்ப்ப, மையெழுந்த ஆவுதியும்' எனக் குறிப்பிடுகிறார். இவ்வாறு ஒன்றற்கொன்று முரண்பட்ட ஆனால் பார்ப்பதற்கு ஒன்றாகத் தோற்றமளிக்கின்ற இரு காட்சிகளை முன்நிறுத்துகிறார் பாலைக் கௌதமனார். இந்த இரண்டில் எது சிறந்தது என்பதற்கான விடையையும் குறிப்பாக அவர் தந்துவிடுகிறார்;

*'விரும்பு மெய்பரந்த பெரும்பெயர் ஆவுதி*
*அடுமை யெழுந்த அடுநெய் ஆவுதி*
*இரண்டுடன் கடிந்த நாற்ற மொகு''* (21:5-14)

எனவரும் பாடலின் பெயர் என்ன தெரியுமா- 'அடுநெய் ஆவுதி' பாடலின் சிறந்த தொடரே அப்பாடலின் பெயராக அமையும் என்பது பதிற்றுப்பத்தின் மரபு எனத் திறன் வல்லார் சொல்வர். அவர்தம் கூற்றுக்கு ஏற்பத் தமிழரின் விருந்தோம்பற் சிறப்புக்குத் தலைமை தருமாறு இப்பாடலுக்கு 'அடுநெய் ஆவுதி' எனும் தொடரே பாடற்பெயராக அமைந்தது !

## எண்ணிக்கை பிறந்த நிலை

விரல்விட்டு எண்ணவியலாத தொகைக்குப் பல, கருவிய, பலவே, கணம் ஆகிய சொற்களைப் பயன்படுத்துவது மரபு. அது போன்று பதிற்றுப்பத்திலும் எண்ணிக்கை பிறந்த நிலையைக் குறிக்க கருவி, தொகுதி, கணம், பல போன்ற தொடர்களைப் புலவர்கள் பயன் கொண்டுள்ளனர்.

*'கருவி வானம்'* - 76:10

*'அமிழ்து திகழ் கருவிய கணமழை'* - 17:11

இத்தொடர்கள். மின்னல், இடி, மழைநீர் ஆகிய தொகுதிகளைக் குறித்தது.

*'மானா மாட்சியான மாண்டன பலவே'* - 14:27

வளப்பம் அற்ற பகைவர் நாடுகள் பல பெருமையழிந்ததை இது குறித்தது.

சேரநாட்டுப் படைத் தொகுதிகளுள் யானைத் தொகுதி பெருஞ் சிறப்பு வாய்ந்தது. இச்சிறப்பு நோக்கி, யானைப் படையைக் குறிக்கும் போதெல்லாம் புலவர்கள் அதன் எண்ணிறந்த தன்மையைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்.

*'பல்களிற்றுத் தொகுதி'* - 14:16

*'கடஅ யானைக் கணநிலை யலற்'* - 20:12

*'சீருடைப் பல்பகடு'* -58:16

*ஆபரந் தன்னை செலவிற்பல்*

*யானை'* -77:11-12

மலைப்பாங்கான சேர நாட்டில் சிகரங்களின் எண்ணிக்கையை அளவிட்டு உரைக்க முடியாது என்பது தோன்ற,

*'கோடுபல விரிந்த நாடுகாண் நெடுவரை'* - 85:7

என்று புலவர்கள் பாடுகின்றனர்.

இதேபோன்று மன்னர்களை வாழ்த்தும் போது எண்ணிக்கை இறந்த நிலையில் மழைத்துளி, ஆற்றுமணல் இவற்றோடு வாழ்நாட்களை இணைத்து,

*'களஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே'* - 48:18

என்றவாறு புலவர்கள் வாழ்த்துகின்றார்கள்.

**புதுமரபு**

மற்ற சங்கப் பாடல்களில் காணாத புது மரபாக அரசனின் வாழ்நாட்களைத் 'திங்கள் என்பது யாண்டு அளவாகவும், யாண்டு என்பது ஊழி அளவாகவும், ஊழி என்பது வெள்ள அளவாகவும் அமைந்து நீடூழி வாழ்க' என வாழ்த்தும் புதிய உத்தி பதிற்றுப்பத்தில் இடம் பெற்றுள்ளது. இளஞ்சேரல் இரும்பொறையை வாழ்த்தும் பெருங்குன்றூர்க் கிழார்,

*''நின்னாள, திங்க ளனைய வாக, திங்கள்*
*யாண்டோ ரனைய வாக யாண்டே*
*ஊழி அனைய வாக ஊழி*
*வெள்ள வரம்பின வாகென.............* (90:51-54)

என எல்லைகளை நீட்டித்துப் பாடுகிறார்.

எண்ணிக்கையில் அடங்காத நிலையைக் குறிப்பிடுவதில் இருநிலைகள் உண்டு. ஒன்று எண்ணிக்கையிறந்தது. அதாவது எண்ண முடியாதது என்ற நிலை. மற்றது, எண்ணத் தொடங்கினால் அது வீணாய் முடியும் என்ற நிலை. எண்ணிக்கையிறந்தநிலை மேலே சுட்டப்பட்டது. இதுதவிர, எண்ணத் தொடங்கினால் அது வீணாய் முடியும் எனக் கருதுமாறு போல சில பகுதிகள் பதிற்றுப்பத்தில் காணப்படுகின்றன. இரவலர்க்குப் பரிசிலாகக் கொடுக்கப்பட்ட குதிரைகளை எண்ணினால் அது கடலில் வரும் அலைகளை எண்ணியதற்குச் சமமாகும் என்று பரணர் பாடுகிறார்;

*'உளையவர் கலிமாப் பொழிந்தவை எண்ணின்*

*தணபல வருஉம் புணரியிற் பலவே'* (42:15, 23)

'போர்க்களத்தில் பிணத்தின் மீது உருண்டோடிய தேர்களையும் குதிரைகளையும் காலட்படை ஓரையும் எண்ணுவதற்கு முடியாமையால், நான் எண்ணினேன் அல்லேன்' என்று பெருஞ்சேரல் இரும்பொறை உடற்றிய போர்க்களத்தைக் கண்டு அரிசில்கிழார் பாடுகிறார் :

*மீபிணத் துருண்ட தேயா ஆழியிற்*
*பண்ணமை தேரும் மாவும் மாக்களும்*
*எண்ணற் கருமையின் எண்ணின்றோ விலலே''* (77:5-7)

## எண்ணும் முறை

பண்டைத் தமிழகத்தில் எண்ணும் முறைகள் இருந்தன என்பதற்குப் பின்வரும் பதிற்றுப்பத்துப் பாடற்பகுதி அகச் சான்றாக அமைகிறது.

*''விருந்தின் வீழ் பிடி எண்ணுமுறை'* - 73:5

மகளிர் தாங்கள் விரும்பிய பிடிகளை எண்ணுவதற்கான எண்ணுமுறைகளைக் கொண்டிருந்தனர் என்பதை இப்பகுதி சுட்டுகிறது.


## முடிவுரை

பண்டைத் தமிழகத்தில் எண்ணியல் பற்றிய சிந்தனை இருந்தது என்பதை மேற்சுட்டிய பதிற்றுப்பத்துப் பாடற்பகுதிகள் நிறுவுகின்றன. இதுபோலவே புறநானூறு, பத்துப்பாட்டு ஆகிய சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களிலும் எண்கள் பற்றிய சிந்தனை படிந்துள்ளதைக் காணலாம். இவற்றுள் குறிப்பாகவும், சிறப்பாகவும் ஏழு, ஐந்து ஆகிய எண்கள் அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. மூன்று என்பது மிகப் பரவலாகப் பிற்காலத்தில் முத்தமிழ், முக்கனி என்றவாறு வழங்கப்பட்டிருக்கலாம். ஆயினும் பதிற்றுப்பத்தில் இதற்குரிய சிறப்பிடம் காணப்படவில்லை. எண்களோடு, எண்ணும் முறை, கருவி, கணம், தொகுதி என்பது போன்று தொகுப்புகள் பற்றிய சிந்தனை, எண்ணற்கருமையைக் குறித்தல், எண்ணிக்கை வரம்பைக் கடந்த நிலையைக் குறித்தல் என்று பல்வேறு நிலைகளில் பண்டைத் தமிழரின் எண்ணியல் சிந்தனை விரிந்து செல்கிறது. இத்தகு எண்ணியல் சிந்தனைகள் ஆதிமனித இனத்தின் செல்வாக்குப் பெற்ற தொன்மக்கூறு என்பதால் பண்டைத் தமிழரின் எண்ணியல் சிந்தனைகளை உலகின் பிற ஆதி மனித இனக் குழுக்களின் எண்ணியல் சிந்தனைகளோடு இணைத்துப் பார்ப்பதற்கு வாய்ப்புகள் நிறைய உள்ளன. இதன் முடிவுகள் தமிழரின் தொன்மச் சிந்தனைகள் உலகத் தொன்மச் சிந்தனைகளோடு உறவு கொண்டுள்ளதை மெய்ப்பிக்கும்.

* * *

# உணவுப் பொருள்களின் விலை டிசம்பரில் குறையும்

புதுதில்லி, ஜூலை 24 : உணவுப் பொருள்களின் விலை இந்த ஆண்டு டிசம்பரிலிருந்து குறையத் தொடங்கும் என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.



தில்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் சனிக்கிழமை நடைபெற்ற 55-வது தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்தில் உரை நிகழ்த்துகிறார் பிரதமர் மன்மோகன் சிங்

நாட்டின் மிக உயரிய கொள்கை வகுக்கும் அமைப்பான தேசிய வளர்ச்சிக் கவுன்சிலின் (என்டிசி) 55-வது கூட்டம் தில்லியில் சனிக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் 11-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டப் பணிகள் அவற்றின் வளர்ச்சி, அதில் உள்ள குறைபாடுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இதில் மாநில முதல்வர்கள், துணை முதல்வர்கள் பங்கேற்றனர். தமிழக துணை முதல்வர் மு.க. ஸ்டாலின் இக்கூட்டத்தில் பங்கேற்றார். இக்கூட்டத்தில் தொடக்க உரை நிகழ்த்திய பிரதமர் மேலும் கூறியது :

நாட்டில் பல பகுதிகளில் பருவ மழை உரிய காலத்தில் பெய்துள்ளது. எனவே உணவு உற்பத்தி அதிகரித்து விலை குறையத் தொடங்கும். உணவுப் பணவீக்கம் டிசம்பர் மாதத்தில் 6 சதவீத அளவுக்குக் குறையும் என அரசு உறுதியாக நம்புகிறது.

விலை உயர்வைக் கட்டுப்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பருவமழை போதுமான அளவுக்குப் பெய்து வருவதால் உணவுப் பொருள்களின் விலை குறைந்து பணவீக்கமும் குறையும். இது நடப்பு நிதி ஆண்டின் பிற்பாதியில் (டிசம்பரில்) நிகழும்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2007-12) 8.1 சதவீதமாக இருக்கும். இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 9 சதவீதத்துக்குச் சற்று குறைவானதாகும். இருப்பினும் திட்ட காலத்திற்குள் இதை எட்டுவது சாத்தியம்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 2008-ஆம் ஆண்டு சர்வதேச தேக்க நிலை காரணமாக 6.7 சதவீதமாக சரிந்தது. சரிவைத் தடுப்பதற்காக பல்வேறு வரிச் சலுகைகளை மத்திய அரசு அளித்தது. இதனால் 2009-ஆம் நிதி ஆண்டில் வளர்ச்சி விகிதம் 7.4 சதவீதத்தை எட்டியது. நடப்பு நிதி ஆண்டில் இது 8.5 சதவீதமாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) : நாட்டில் ஒரே மாதிரியான வரி விதிப்பு முறையை அமல்படுத்த சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) முறையை 2011-12 ம் நிதி ஆண்டிலிருந்து படிப்படியாக அமல்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கு மாநில முதல்வர்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றார் பிரதமர் மன்மோகன் சிங்.

நாடு முழுவதும் இத்தகைய வரி விதிப்பு முறைய்ய அமல்படுத்த பாதிக்கும் அதிகமான மாநிலங்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும். அப்போதுதான் அரசியல் சாசன சட்டத்தின்படி இதை அமல்படுத்த முடியும். இதைக் கருத்தில் கொண்டே பாஜக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநில அரசுகளும் இதற்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் மன்மோகன் சிங்.

நாடாளுமன்றத்தின் மழைக் காலக் கூட்டத் தொடர் ஜூலை 26-ஆம் தேதி (திங்கள்கிழமை) கூடுகிறது. விலைவாசி பிரச்னையை எதிர்க்கட்சிகள் பிரதானமாக எழுப்பும் என்கிற சூழலில் பிரதமர் மன்மோகன் சிங், உணவுப் பொருள் விலை உயர்வு குறித்து என்டிசி கூட்டத்தில் பேசியிருப்பது முக்கியத்துவம் பெறுகிறது.

*நன்றி : தினமணி ஜூலை 25, ஞாயிற்றுக்கிழமை*

# சீர்காழி மூவர்

முனைவர்
இரா. செல்வக்கணபதி

சீர்காழி மூவர் என்ற இந்தத் தொடர், தமிழில் -கீர்த்தனங்கள் பாடிய 1. முத்துத்தாண்டவர் (1560-1640), 2. மாரி முத்தாப்பிள்ளை (1712 - 1787) 3. அருணாசலக் கவிராயர் (1711-1778) ஆகிய மூவரையும் குறித்து நிற்கிறது. தமிழில் தேவாரம் அருளிச் செய்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவரையும் தேவார மூவர் என்று சைவ இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் சுட்டுகின்றனர். திருவாரூரில் அவதரித்து கர்நாடக சங்கீதக் கீர்த்தனைகளை அருளிச் செய்த, சியாமா சாஸ்திரிகள் (1762 - 1827), 2. தியாகராஜ சுவாமிகள் (1767 - 1847), 3. முத்துசுவாமி தீட்சிதர் (1776 - 1835) ஆகிய மூவரையும் கர்நாடக சங்கீத மும்மூர்த்திகள் என்று குறிக்கும் வழக்கு உள்ளது. தமிழ் இசை இயக்கம் வளர்ச்சி பெற்ற போது, கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளுக்குக் காலத்தால் முற்பட்டவர்களும், தமிழில் முதல் கீர்த்தனை ரகங்களை அடுத்தடுத்துப் படைத்தளித்தவர்களும், சீர்காழியிலும் அதனைச் சார்ந்த பகுதிகளிலும் பரந்தும் வாழ்ந்தும் சீர்காழியில் வசித்தவர்களுமாகிய முன் குறித்த முத்துத்தாண்டவர் முதலிய மூவரையும் 'சீர்காழி மூவர்' என்று அழைக்கும் மரபு தோற்றம் கொண்டது. அம்மூவரையும் கருநாடக சங்கீத தமிழிசை ஆதி மும்மூர்த்திகள் என்று மு.அருணாசலம் குறிக்கிறார். டாக்டர் எஸ்.இராமநாதன் தியாகராஜர் காலத்துக்கு முற்பட்ட இம்மூவரையும் கருநாடக சங்கீதத்தின் ஆதி மும்மூர்த்திகள் என்று குறிப்பிடலாம் என்றும் மு.அருணாசலம் இம்மூவர் வரலாறு எழுதிய நூல் ஒன்றின் (1985) அணிந்துரையில் அடையாளப்படுத்துகிறார்.

தமிழ் மொழியில், முதன் முதல் காணக் கிடைக்கும் இசைப்பாடல்கள் எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றாகியப் பரிபாடலில் இடம் பெற்றுள்ளன. கிடைக்கப்பெற்ற 22 பாடல்களில் ஒவ்வொன்றின்

இறுதியிலும் அந்தப் பாடலைப் பாடியவர் பெயர்; இசையமைத்தவர் யார் என்ற விபரம் ; அப்பாடலுக்கு உரிய பண்ணடைவு குறிக்கப்பெற்றுள்ளன. திருமால் குறித்த கடவுள் வாழ்த்தாக வரும் 2ஆவது பாடல் நிறைவில் 1. கீரந்தையார்பாட்டு 2. நன்னாகனார் இசை 3. பண்ணுப் பாலையாழ் என்று குறிக்கப்பெற்றுள்ளது. எனவே, இப்பாடல் இன்ன பண்ணில் பாடப்பட வேண்டும் என்ற வரையறை - இசைவாணர்களால் கி.பி.2ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே பரிபாடல்களுக்கு வரையறுக்கப்பெற்றிருந்தமை புலனாகின்றது. இந்த இசைமரபு சிலப்பதிகாரத்தில் மேலும் கருக்கொண்டு வளர்ச்சி பெற்றது. சிலப்பதிகாரத்துக் கானல்வரி, வேட்டுவவரி, ஆழ்ச்சியர் குரவை ஆகிய பகுதிகளும் -அவற்றுக்கு அமைந்த அடியார்க்கு நல்லார் உரைப் பகுதியும், தமிழ் இசை பெற்றிருந்த மாபெரும் வளர்ச்சிக்கு அழியாச் சான்றுகளாக நின்று நிலவுகின்றன. கி.பி.ஏழு, எட்டாம் நூற்றாண்டுகளில் தேவார மூவரும், ஆழ்வார் பெருமக்களில் பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், குலசேகர ஆழ்வார், நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்களும் ப்ழந்தமிழ்ப் பண்களில் பாமாலை புனைந்து தமிழ் இசைக்கு மறுவாழ்வு தந்தனர். பழந்தமிழ்ப் பண்கள் 103இல் தேவார ஆசிரியர்கள் 23 பண்களையும், திவ்யப்பிரபந்த ஆசிரியர்கள் 30 பண்களையும் கையாண்டு இசைப்பயிர் வளர்த்தனர். தொடர்ந்து தமிழ் இசை வரலாற்றில் சந்தம் கொழிக்கும் திருப்புகழ் இசைப்பாடல்கள் அழகிய தாளக் கட்டுக்களுடன் அருணகிரி நாதரால் படைத்தளிக்கப்பெற்றன. மூர்த்திகளும், திருக்கோயில் நாயனக் கலைஞர்களும், கருவி இசைக் கலைஞர்களும் தமிழ்ப் பண்ணைப் போற்றி வளர்த்து வந்தனர். இந்நிலையில் தமிழ் இசைக்கு ஒரு புதிய வரவாகப் பண்டைத்தமிழ் இசை மரபு மாறாத இசைக் கீர்த்தனங்கள் பல்லவி, அனுபல்லவி - சரணங்கள் என்ற அமைப்பில் முதல் முதல் 16ஆம் நூற்றாண்டில் சீகாழி முத்துத்தாண்டவரால் படைத்தளிக்கப்பெற்றன. அவர் வழி நின்று 150 ஆண்டுகளுக்குப் பின் இப்புதிய இசை மரபைக் கொண்டு செலுத்தினர் மாரிமுத்துப்பிள்ளையும், அருணாசலக் கவிராயரும். தென்னாட்டு மொழிகளில் தோற்றம் கொண்டு பெரு வளர்ச்சி பெற்ற கர்நாடக இசை மரபின் தொடக்கமாக முத்துத் தாண்டவர் வருகை அமைந்தது.

முத்துத்தாண்டவர் - சீர்காழியில் - திருக்கோயிலைச் சார்ந்து இசை வளர்த்து வந்த இசை மரபில் வந்தவர். இயற்பெயர் தாண்டவர். தாண்டவர், தாண்டவராயர், தாண்டவக்கோன் என்பன எல்லாம் நடராசப் பெருமானைக் குறித்தமைந்தன. இவர் பெயரின் முன் உள்ள முத்து என்பது பின் அவர் இசைக்கலைஞராய் வளர்ந்தமைந்த காலத்தில் - அறிஞர்களால் தரப்பெற்ற சிறப்பு அடையாக இருக்கலாம். அல்லது சீர்காழி மலைக் கோயிலில் அடியார் கோலத்தில் காட்சிதரும் முத்துச் சட்டைநாதரின் பெயர் தாக்கமாக இணைக்கப் பெற்றிருக்கலாம்.

முத்துத்தாண்டவர் இசை வேளாளர் மரபினராயினும் இவர் மத்தளம் வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவராதல் வேண்டும் என்று அறியமுடிகிறது. இவர் தம்முடைய இசைப் பாடல்களில் மத்தளச் சொற்கட்டுகளுக்குத் தாளச் சதிச் சொற்களை காலக்கணக்குடன் அமைத்துக் காட்டி நடன நலம் காட்டியுள்ளமை இங்கே கருதத்தக்கது.

கலைகளை விரும்பிப் போற்றிய தமிழகம் - கலைவளர்க்கும் கலைஞர்கள் வாழ்வில் அதிக நாட்டம் கொண்டிருக்கவில்லை. தாண்டவர் வறுமையில் வாடியவர். குன்மநோய் என்ற தீராத வயிற்று நோயும் அவரை வாட்டியது. சீர்காழியில் நடனம் வல்ல பெண் ஒருத்திக்கு - மத்தளம் வாசிக்கச் சென்று வந்தமையைத் தவறாக எண்ணிக் குடும்பத்தினரும் அவரை வீட்டை விட்டு வெளியேற்றினர். கோயிலே அவருக்குப் புகலிடமாக அமைந்தது. ஓர் இரவில் பசியும் நோய்த் துன்பமும் மிக மயங்கிய இவர் திருக்கோயில் வாகன மண்டபத்தில் கிடந்தது அறியாது கோயிலார் நடையடைத்துச் சென்றனர். கண் விழித்து, நள்ளிரவில் - குற்றவுணர்வுடன் திருநிலை நாயக் சந்நிதியில் அவர் நின்றபோது, பெருமகனாரின் பத்து வயது சிறுமகள் உணவு கொண்டு வந்து தர உண்டு களைப்பு நீங்க, சிறுமியாக வந்த அம்மை மறைந்தருளுகிறார். தாண்டவரின் பசியோடு, குன்ம நோயும் விடைபெறுகிறது. தில்லை சென்று திருச்சிற்றம்பலனைப்பாடு என அசரீரி எழுகிறது. திகைத்து நின்றபோது அம்பலவன் சந்நிதியில் வழிபட்டு நிற்பாரில் யாரோ ஒருவர் ஒரு சொல் அவனது ஒரு தொடர் விளம்ப அதனையே பற்றுக் கோடாகக் கொண்டு பாடு என்று அசரீரி பிறக்கிறது.

பொழுது புலர்ந்து, நடை திறக்கப்பட, நடந்தன கேட்டு ஊரார் வியக்கத் தாண்டவர் கால்கள் தில்லை மன்றுள் புகுகின்றன. அம்பலவாணன் வணங்கி 'அந்தத்' தொடக்கதிற்காகப் பிரார்த்தித்து கண்நீர் அரும்ப, யாரே ஓர் அடியவர் உரத்த குரலில் வழிபடும் கூட்டத்திலிருந்து, அடுத்தவருக்குக் கூறுவாராய் இது 'பூலோக கையிலாய கிரி' என்று உணர்ச்சி வயப்பட்டு உரக்க மொழிய, அம்பலவனே அடி எடுத்துக் கொடுத்ததாக உணர்ந்த தாண்டவர் அத்தொடரையே பல்லவியாகக் கொண்டு

*பூலோக கையிலாச கிரி சிதம்பர மல்லாற்*

*புவனத்தில் வேறு முண்டோ*

என்று பாடத் தொடங்குகிறார். சேக்கிழார் பெருமானுக்கு 'உலகெலாம்' என அடி எடுத்துக் கொடுக்கத் திருத்தொண்டர் மாக்கதை பிறந்தது. தாண்டவருக்குத் தாண்டவக்கோன் - தன்டையார் வழி அடி எடுத்துக் கொடுக்க - தமிழ் இசை வாழ தமிழர் நோன்புகள் மெய்ப்பட முதல் தமிழ் இசைக் கீர்த்தனை அம்பலன் சந்நிதியில் பூத்தது. பவப்பிரியா இராகத்தில் மிகரச் செம்புடைத்தாளத்தில் மேலும் 'ஓர்' அனுபல்லவியும் இரண்டு சரணங்களும் வந்து இணைந்து கொண்டன.

சிதம்பரம் எப்படிப் பூலோக கைலாயமாக முடியும் என்ற வினா முன் நின்றது. தாண்டவர் அனுபல்லவியில் விடை தருகிறார். சைவ சித்தாந்த நாற்பாதங்களும் வரிசைப்படுத்தப்படுகின்றன.

*சாலோக சாமீப சாரூப சாயுச்சிய*

*சபைவாணர் ஆனந்தத் தாண்டவம் புரிவதால்*

சைவ சித்தாந்தச் செந்நெறியில் சரியைத் தொண்டு செய்வார் சிவன் உலகம் (சாலோகம்) அடைவார். கிரியைத் தொண்டு செய்வார் (சாமிபம்) இறைவன் அருகில் இருப்பர். மோகத் தொண்டு செய்பவர் (சாரூபம்) சிவன் உருவத்தை அடைந்து இருப்பர். ஞானநெறி நிற்போர் (சாயுச்சிவம்) இறைவனோடு கலந்து, உய்வர். இந்நான்கும் தரவல்ல அம்பலவன் சந்நிதியைப் பூலோக கைலாயம் என்பது பொருத்தம் தானே என்கிறார் தாண்டவர். எவ்வளவு அழகான பொருத்தப்பாடு என நாம் வியக்கிறோம்.

சரணங்களில் தில்லை ஆலய எழிலும், நகரச் சிறப்பும் வண்ணம் குழைத்துத் தீட்டப் பெற்ற ஓவியங்களாக விரிகின்றன. நான்கு திசைகளிலும் இராஜகோபுரங்களைக் கொண்ட தலம் சிதம்பரம். நால்வர் பெருமக்கள் ஒவ்வொருவருவம் ஒவ்வோர் கோபுரவாயில் வழி உட்புகுந்து வழிபட்ட சிறப்பு இத்தலத்திற்கு உண்டு. உயரத்தாலும், சிற்ப எழிலாலும் சிறந்தியங்கும் இராஜகோபுரங்கள் ஒரு பக்கம் அழகை அள்ளித் தொடுக்கின்றன என்றால், மறுபக்கம் நவரத்தினங்கள் பதித்த சித்திர மதில்கள். இன்னொரு பக்கம் பார்த்தால் வானுலகைத் தொடத் துடிப்பன போல் உயர்ந்து நிற்கும் கம்பங்கள். கண்களைத் திருப்பினால் தில்லையம்பலவன் மார்கழித் திருவாதிரையில் அபிடேகம் கொண்டு, ஆனந்த தரிசனம் நல்கும் தென்றல் வீசும் ஆயிரக்கால் மண்டபம். ஒன்பது கங்கைகளும் ஒன்று திரண்டு வந்தன போல் அலைவீசும் சிவகங்கைத் தீர்த்தம். இத்தகு பேரெழில் மிக்க இவ்வாலயத்தில் மாலும், அயனும் தேவியும் தேடொணாத் தில்லையம்பலவன் ஆனந்தக் கூத்தியற்றும் தில்லையம்பலம். இதன் கண் புகுந்து கிடந்த அழகெல்லாம் காண்பார்க்கு அற்புதம் விளைப்பதால் இதனைப் பூலோக கைலாசம் என்று உரைப்பதில் பிழை ஏதும் உண்டோ?

*நாலுமஹாரே வென்னும் நாலுகோபுர நிலையும்*

*நவரத்தின மணிகளால் லொளிர்சித்திர மதில்களும்*

*மேனுவகை அனந்திடல்போல் உயர்ந்தே வெயில்*

*விரிந்த கம்பத் திரள்களும்*

*கானுலாவு மாயிரக்கான் மணிமண்டபமும் - நவ*

*கங்கையானிற் சிறந்த சிவகங்கையின் விலாசமும்*

*ஆலிலையின் மானுமயனாறு மறியாத பேரம்பல*

*மேவுவோர்க் கற்புதம் புரிதலால் (பூலோக கைலாச...)*

முத்துத் தாண்டவரின் கீர்த்தனங்களாக இன்று நமக்குக் கிடைப்பன அறுபது மட்டுமே. இவற்றுள் அவர் 25 இராகங்களையும், 7 வகைத் தாளங்களையும் கையாண்டுள்ளார். கீர்த்தனங்களோடு அவ்வப்போது, இவர் பாடியனவாகக் கிடைக்கப்பெற்றுள்ள பதங்கள் இருபத்தைந்து, பரம் என்பது அகப்பாட்டு வகையாகும். நடராசப்

பெருமான் மீது காதல் கொண்ட தலைமகள் கூற்றாக வருவது. தமிழில் முதல் பதம் பாடிய பெருமையும் முத்துத்தாண்டவருக்கே உண்டு. பதங்களில் இவர் கையாண்டுள்ள இராகங்களுள் ஒன்றாகிய 'ஆஷாட கன்னடம்' என்பது தமிழிற்குப் புதிதாகக் கிடைத்த இசை வடிவமாகும்.

கடந்த 18, 19, 20ஆம் நூற்றாண்டுகளில் முத்துத்தாண்டவருடைய கீர்த்தனங்களும், பதங்களும், இசைமேடைகளிலும் ஆடல் அரங்குகளிலும் பெரும் வரவேற்பைப் பெற்றன. இவரது கீர்த்தனைகளில், 'சேவிக்க வேண்டுமையா', அருமருந்து ஒரு ஒளிமருந்து இது; 'தெண்டனிட்டேன் என்று சொல்வீர்; 'ஆடிய வேடிக்கை பாரீர்; 'ஆநந்த தாண்டவம் ஆடினார்; தெரிசனமே நினை மனமே' என்ற தொடக்கமுடையனவும், பதங்களில் பலவும் மிகவும் பிரசித்தி பெற்றன. முத்துத்தாண்டவர் பரம்பரையில் வந்த திருப்பாம்புரம் - புல்லாங்குழல் வித்துவான் ந.சாமிநாதபிள்ளை என்பார் தாண்டவர் கீர்த்தனங்களைச் சுரப்படுத்தி வர்ண மெட்டுக்கள் அமைத்தவர். முத்துத் தாண்டவர் பரம்பரையினர் இன்றும் சிறந்த இசைவாணர்களாகத் திகழ்ந்து வருகின்றனர்.

முத்துத் தாண்டவர்களின் கீர்த்தனைகளிலும் பதங்களிலும் தாளச் சொற்கட்டுக்களும் அபூர்வமானவை. இவர் பல கீர்த்தனைகளில் தத்தகாரம் அமைத்துக் காட்டியுள்ளார். கீர்த்தனைகளில் சரணங்கள் போன்று, நீண்டதாளக் கட்டுமங்களையும், தாளக் கோர்வைகளையும் முதல் முதல் அமைத்துக் காட்டியுள்ளார். முனைவர் வீ.ப.கா.சுந்தரம் 'இன்றுள்ள கீர்த்தனைகளின் நட்டுவாங்க அமைப்புக்கு ஆதி மூலவர் முத்துத் தாண்டவரே' என்கிறார்.

சீகாழி முத்துத் தாண்டவர் தமிழ் இசைக் கீர்த்தனங்கள் பிரசித்தி பெற்றுத் தமிழ் நாடெங்கும் ஒலித்துக் கொண்டிருந்த காலத்தில் தாண்டவருக்கு 152 ஆண்டுகளுக்குப்பின் சீர்காழியை அடுத்த தில்லைவிடங்கன் என்ற ஊரில் தஞ்சை மாவட்ட சைவ வேளாளர் மரபில் பிறந்தார் மாரிமுத்தாப்பிள்ளை. 18ஆம் நூற்றாண்டின் பெரும்புலவர் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர் முத்துத்தாண்டவர் - தந்தையார் தெய்வப் பெருமாள் பிள்ளை. சிவகங்கநாத தேசிகரிடம் கல்வி பயின்றவர். இவரின் மூத்த மகன் சித்த சுகாதீனமில்லாது இருந்தார்.

தில்லையம்பலவன் கனவில் தோன்றி நம்மீது பாடல் பாடுக எனப் பணித்தான். அன்றுமுதல் பாடத் தொடங்கிய மாரிமுத்தாப்பிள்ளை புலியூர் வெண்பா, சிதம்பரேசர் விரல்விடு தூது, தில்லைப்பள்ளு, வண்ணம் மற்றும் சில தோத்திரப்பதிகங்களும் பாடினார். சமகாலத்தில் வாழ்ந்திருந்த சீர்காழி அருணாசலக் கவிராயரோடு இவருக்குப் பழக்கமும் நட்பும் நிலவின. தம் புலமைத் திறத்தால் முத்துத் தாண்டவர் வழி நின்று தில்லையம்பலவன் மீது பல கீர்த்தனைகளையும் பதங்களையும் பாடினார். அவை ஒரு நூற்றுக்கு மேல் இருக்கக் கூடும். இன்று கிடைத்தவை 25 மட்டுமே. அவை 17 இராகங்களில் அமைந்துள்ளன. 5 தாளங்களை இவர் கையாண்டுள்ளார்.

தமிழ் இசை மேடைகளில் இவரின் கீர்த்தனங்கள் இன்றும் பாடப் பெற்று வருகின்றன. இவருடைய கீர்த்தனைகளில் பிரசித்தி பெற்றவை 'காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே' 'என்ன பிழைப்பு உன்றன் பிழைப்பையா' 'ஒரு கால் சிவ சிதம்பரம் என்று சொன்னால்; 'வீடும் அம்பலமாகி நீரும் அந்தரம் ஆனீர்' என்ற தொடக்கமுடைய கீர்த்தனங்கள் பக்தி ரகம் ததும்புவன. இவர் கீர்த்தனங்களில் இரண்டு 'பதங்'களாகக் கொள்ளத்தக்கன. அவற்றுள் ஒன்று சுருட்டி ராகத்தில் அமைந்த, 'ஏதுக்கித்தனை மோடிதான் உமக்கு என்றன் மேலையா' என்பது. மற்றது, 'என்ன காரியத்துக்கு இந்தப் பேயாண்டி மேல் இச்சை கொண்டாய் மகனே' என்று தொடங்கும் செவிலி கூற்றாக வருவது. மாரிமுத்தாப்பிள்ளை மேற்குறித்த கீர்த்தனங்கள் பதங்கள் மட்டுமின்றி இலக்கிய எழில்மிக்க சிற்றிலக்கியங்கள் பலவும் படைத்தவர். சிங்கார வேலவர் (மயிலாப்பூர்) பதிகம், தில்லை நாடகங்கள், ஐயனார் நொண்டி நாடகம், வருணாபுரி ஆதி மூலேசர் குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகம், பதிகம், அநீதி நாடகம் என்பன சிலவாகும்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

## தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம்

54, தமிழ்ச் சங்கச் சாலை

மதுரை - 625 001

தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.

செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1

தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை - 1

RNI Regd. No. 5508/56 August 2010



# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

[ தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது ]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

## 2010 - 2011ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

### சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

| இரா. அழகுமலை | முனைவர் சு. விஜயன் | இரா. குருசாமி |
|---|---|---|
| செயலாளர் | முதல்வர் (பொறுப்பு) | செயலாளர் |
| மதுரைத் தமிழ்ச் சங்கம் | செந்தமிழ்க் கல்லூரி | செந்தமிழ்க் கல்லூரி |

அனுப்புநர்,

**செயலாளர்**

மதுரைத் தமிழ்ச் சங்கம்

மதுரை – 625 001

*From*

**SECRETARY**

Madurai Tamilsangam

Madurai - 625 001

TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.